24-3-1952 M.Y.M M BANGALORE

போர்வாள்

வாள் 5 வீச்சு 25
22-3-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:
காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2

அந்நாள் எந்நாளோ

"கேட்டீரா ஐயா செய்தியை! விதவையாம், கைம்பெண்ணாம், கஷ்டப்படுகிறார்களாம்! நீதியா, நேர்மையா என்று நம்மையே கேட்கிறான் இவன்! சுத்தமுட்டாள்! அவள் பூர்வஜென்மத்திலே செய்த பாபத்தால், குங்குமம், மஞ்சள், பூ, சகலத்தையும் இழந்தாள! அவளுக்கு மறு மணம் செய்ய வேண்டுமாம்? நீதான சொல்லேன், கெட்டபால் நல்ல பாலாகுமா? பட்ட மரம் துளிர்க்குமா? வெம்பிய காய் கனியாகுமா?"

—அன்று.

"மேல் நாடுகளைப் பார்த்தாகிலும் நாம் தெளிவுபெற வேண்டாமா? அங்கெல்லாம் பெண்களுக்கு எவ்வளவு சுதந்திரம் தந்திருக்கிறார்கள்? கட்டிய கணவன் உயிரோடு உலாவும்போதே, அவனை விலக்கிவிட்டு வேறு கல்யாணம் செய்துகொள்ளும் இந்நாகரிக நாளிலே, கணவனை இழந்து கண்ணீர் சிந்தும் இளம் விதவைகளுக்கு மறுமணம் கூடாதென்று, அறிவும் தெளிவும் பெற்ற எவனாவது முன்வந்து கூறமுடியுமா?

—இன்று.

* * *

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு கூட விதவைகளுக்கு மறுமணம் தேவை என்ற நியாயமான முறையீட்டிற்கும் பலத்த எதிர்ப்பு இருந்தது. ஆனால் அதே விதவா விவாகம் இன்று சர்வ சாதாரணமாகி விட்டது. விதவைகள் அனைவருக்கும் மறுமணம் செய்துவிட்டார்களா என்பதல்ல நாம் இங்கு கவனிக்க வேண்டியது. ஆனால் அன்று எந்தப் பேச்சுக்கு எதிர்ப்புப் பலமாகயிருந்ததோ, அதே பேச்சு இன்று சர்வ சாதாரணமாகி விட்டது!

அன்றைக்கும் இன்றைக்கும் இடையே எத்தனை ஆண்டுகள் கழிந்திருக்கும், அன்று ஒருவன் சொன்னதை இன்று பலரும் சொல்லவும், ஒப்பவும் இப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கவும், எவ்வளவுபேர் அல்லும் பகலும் உழைத்திருப்பார்கள்! எவ்வளவு எதிர்ப்புகளுக்கிடையே வேலை செய்திருப்பார்கள்!!

இந்த மாற்றம் எவ்வளவு பேர்களுடைய உழைப்பையும், பொருளையும், இளமையையும், அறிவையும் உறிஞ்சியிருக்கும்!

மறுமணம் மட்டுமல்ல, பெண்கள் முன்னேற்றம், அன்றிருந்த சமுதாய விலங்குகள், மூடப்பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைச் சிறிது சிறிதாக மாற்றி சமுதாயத்தைச் சீர்திருத்தச் சலியாது உழைத்தவர் பலர்!

வங்காளத்தில் வாழ்ந்த சீர்திருத்தவாதி, பண்டிட் ஈஸ்வர சந்திர வித்யாசாகரர், இளந்தைக் கைம்பெண்கள் இன்னலில் துடிதுடித்துக், கண்ணீர் கசிவதைக் கண்டு உள்ளம் பதைபதைத்து விதவைகளின் நலனுக்காக உழைக்க முன்வந்தார். "விதவைகள் மறுமணச் சீர்திருத்தச் சட்டம்" ஒன்றை 1856-ஆம் ஆண்டு கொண்டுவந்தார். விதவா விவாகம் சாஸ்திரத்திற்கு விரோதமானதல்ல என்பதை விளக்க முயற்சித்து, ஒரு சிறு துண்டுப் பிரசுரத்தையும் வெளியிட்டார்.

பெண்களுக்குக் கல்வி அவசியம் என்பதை விளக்கிப் பேசியதோடு நின்றுவிடாமல், பல பெண் பாடசாலைகளை ஏற்படுத்தி அவர்களுக்குக் கல்வியளித்தும் வந்தார்.

பக்கபலமோ, பிறர் உதவியோ இன்றி அவர், தன்னந் தனி மனிதராக நின்று, பற்பல விதவா விவாகங்களைச் செய்வித்திருக்கிறார். அப்படி முதன் முறையாக இந்திய உபகண்டத்திலே, விதவா விவாகம் 1865-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்தது.

குழந்தை மணத்தின் கொடுமையையும், ஒருவனே பலமனைவிகளை மணக்கும் வழக்கத்தையும் வன்மையாகக் கண்டித்தார். பண்டிட் அதர்கள், ஊருக்கு உபதேசியாக மட்டுமிராமல், தன் குடும்பத்திலும் சீர்திருத்த வாடை வீசச் செய்தார். தன் மகனுக்கு ஒரு விதவையைக் கல்யாணம் செய்வித்தும், தன் பெண்களுக்குப் பதினைந்து, பதினெட்டு வயதான பிறகுதான் மணம் செய்வித்தும், தன் கொள்கைகளுக்குத் தானே எடுத்துக்காட்டாக விளங்கினார்.

அவர் உழைப்பின் பயனாக 1861 ஆம் ஆண்டு, பம்பாயில் 'விதவா விவாகச் சங்கம்' ஏற்பட்டது.

1870 ஆம் ஆண்டிலிருந்து மென்கார், ரேனடே, விஷ்ணு பண்டிட் ஆகியோரும் இந்து விதவைகளுக்கு மறுமணம் தேவை என்பதை ஆத

ரிக்கவும், அதற்காகப் பணியாற்றவும் முன்வந்தனர்.

P. M. மலபாரி, 1884 ஆம் ஆண்டிலிருந்து பெண்களின் நலத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தன் வாழ்நாளைச் செலவழித்து வரலானர். "குழந்தை மணமும், இந்தியாவில் திணிக்கப்பட்ட கைம்மையும்" என்ற நூலைத் தீட்டி 1888 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

இப்படியாகப் பல அறிஞர்கள், பெண்களின் பரிதாப நிலைமையைப் பற்றி, பேசியும் எழுதியும் அரசாங்கத்தின் கவனத்தைக் கவர்ந்தார்கள்.

சீர்திருத்தவாதிகளின் பக்கம் நின்ற நியாயமும், அவர்கள் எடுத்துக்காட்டிய காரணங்களும், பண்டிட் சந்திர வித்யா சாகரர் 1860-ஆம் ஆண்டு கொண்டுவந்த பெண்களுக்குப் பனிரண்டு வயதிற்கு மேல்தான் மணம் செய்யலாம் என்ற வயது நிர்ணயச் சட்டத்தைச் சர்க்கார் 1891 ஆம் ஆண்டு நிறைவேற்றினர்.

'1891 ஆம் ஆண்டுச் சட்டத்தை' பலர் பலமாக எதிர்த்தார்கள். நாட்டின் பலப்பல மூலை முடுக்குகளிலிருந்தும் கண்டனங்கள் எழுந்தன. மற்ற மாகாண வாசிகளைவிட வங்காளிகள் தான், மதமே ஆபத்தில் சிக்கிக் கொண்டது என்று ஓலமிட்டும், பலத்த எதிர்ப்புக் காட்டியும் வந்தனர்.

சீர்திருத்தவாதிகள் பலத்த எதிர்ப்புக்களுக் கிடையே சிக்கிய நேரத்தில், அவர்கள் உள்ளம் உடையாது காத்து, ஊக்குவிக்க, வைதிகரும் இந்துமத பக்தருமான லோகமான்ய பாலகங்காதர திலகர் முன்வந்து, தானும் அச்சட்டத்தை ஆதரிப்பதாகக் கூறினர்.

அச்சட்டம், குழந்தை மணத்தை முற்றும் நிறுத்தமுடியாமல் போயினும், சிறிது சிறிதாகக் குறைத்துக்கொண்டே வரப்பயன்பட்டது பிறகு வயது நிர்ணயம் பனிரண்டிலிருந்து பதின்மூன்றுக உயர்த்தப்பட்டது.

1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் என்ற பெயரிலே, இது நாட்டில் நடமாடும் சட்டமாயிற்று!

பாபு சசிபடாபெனர்ஜி, கல்கத்தாவிற்கு அருகேயிருந்த பெரனகூர் என்ற ஊரிலே முதன் முறையாக 1887-ம் ஆண்டு, "விதவைகள் இல்லம்" ஒன்றை ஆரம்பித்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பண்டிதாரமபாய் என்பவர் 'சாரதாசதன்' என்ற விடுதியை இந்துவிதவைகளுக்காகப் பம்பாயில் திறந்தார். அவ்விடுதி பிறகு பூனாவிற்கு மாற்றப் பட்டது.

அவ் விடுதியிலிருந்த பல பெண்கள் கிருத்துவ மதத்தில் சேர ஆரம்பித்ததைக் கண்ட, இந்துமதக்காப்பாளர், D.K. கார்வி பூனாவிலேயே 'இந்து விதவைகள் விடுதிச் சங்கம்' ஒன்றை 1896-ம் ஆண்டில் திறந்தார். பிறகு அவர் உயர்ந்த லட்சியங்களோடு அதனை 'இந்திய மாதர் சர்வகலாசாலை'யாக 1916-ம் ஆண்டு மாற்றிப், பெண்களுக்கு மேல்படிப்புத் தரலானர்.

தேவதாசி வழக்கத்தை பெண்கள் முன்னேற்றத்தில் அக்கரை கொண்ட பலரும் கண்டித்தனர். பிரமோஸ் முதலிய சமுதாய சீர்திருத்தக்காரர்கள் அம்முறையைப் பலமாக எதிர்த்தனர். அந்தக்கேவலமான வழக்கத்தை ஒழிக்க அவர்கள் அரும்பாடு பட்டாரகள்.

அப்பொழுது சென்னை கவர்னராகயிருந்த லார்ட்வென்லாக் (1891 1896) என்பவர் தேவதாசிகள் ஆடிய நடனத்தைப் பார்க்கவும் மறுத்தார். நாட்டிய நங்கையின் கைவளைவு நெளிவுகளைப் பார்க்கவும் கண்கூசிய முதல் அரசாங்க அதிகாரி அவர்தான்.

"கோயிலுக்கென்று பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் கொடிய பழக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் எந்தக்கோயில் அதிகாரியும் தண்டிக்கப்படுவார்" என்ற சட்டத்தை 1906-ம் ஆண்டு பம்பாய் சர்க்கார் நிறைவேற்றியது. மைசூர் அவ்விதம் பொட்டுக்கட்டும் சம்பந்தமாகக் கோயில்களில் விழாக்கள் நடத்துதல் கூடாதென்று தடை விதித்தார்கள்.

கிருத்துவப் பாதிரிமார்கள் நடத்திவந்த பள்ளிக்கூடங்களின் மூலமாகவும், இந்திய சீர்திருத்த இயக்கங்களின் முயற்சியாலும், பெண் கல்வி நாளுக்கு நாள் நாட்டிலே வளர்ந்து கொண்டே வந்தது.

1885-ம் ஆண்டு, பெண்களுக்கு வைத்தியக்கல்வி மிகமிக அவசியமென்பதைப் பல அறிஞர்கள் உணரத் தொடங்கினர். அதற்காகப் பலர் பிரசாரம் செய்து, சென்னை வைத்தியக் கல்லூரியில் முதன் முறையாக 1875-ம் ஆண்டு பெண்களையும் சேர்த்துக் கொண்டனர். அதற்கு எட்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் பம்பாய் வைத்தியக் கல்லூரியில் பெண்களை அனுமதித்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே, இந்திய உபகண்டத்தில் இருந்த பற்பல ஜாதிப் பிரிவுகளைக்கண்டு உள்ளம் நொந்தனர் பல படித்தவர்கள். ஆங்கிலக்கல்வி நாட்டில் சிறிது சிறிதாகப் பரவியும் ஜாதிப பிரிவுகள் சிறிதுகூடக் குறையாமல் அப்படியே இருந்தன. W. வார்ட் என்ற பாதிரியார் 1818-ம் ஆண்டு வங்காளத்தில் ஜாதியை ஒழிக்க அரும்பாடு பட்டார். அக்காலத்தில் நகரங்களிலும் சேனையிலும், ஜாதி வெறி சிறிது தணிந்திருந்த போதிலும் கிராமங்களில் பழைய பழக்கம் சிறிதுகூடக் குறையாமல் அப்படியே யிருந்தது.

சீர்திருத்தவாதிகள் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் ஜாதி ஒழிப்பிற்காகவும் பாடுபட்டும் பூரணமான பலன் கிடைக்கவில்லையென்றால், இந்த நாட்டிலுள்ள பிற்போக்குச் சக்திகளின் வலிமையைத்தான் அது நன்கு தெளிவுபடுத்தும்.

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாய, மத, இயக்கங்கள்" என்ற நூலிலே பேராசிரியர், சி. எஸ். சீனிவாசாச்சாரி, பெண்கள் முன்னேற்றத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் பாடுபட்டதாகப் பல வட நாட்டாரைப் பற்றியும் பல மதஸ்தாபனங்களைப்பற்றியும் எழுதியிருக்கிறார். அவர் பத்தொன்பதாம் நூற்றாண்டுச்சீர்திருத்தத்தைப் பற்றியும் எழுதியுள்ளார். ஆரிய சமாஜம், பிரம சமாஜம், இராமகிருஷ்ண மடம் ஆகியவற்றைச் சேர்ந்தோர் செய்த சீர்திருத்தங்களைப்பற்றி எழுதியிருக்கிறாரே அன்றித், தமிழகத்திலே இருபத்தைந்து ஆண்டுகளாகப் பலத்த எதிர்ப்புக்கிடையே பல்வகை இன்னல்களையும் பொருட்படுத்தாது சீர்திருத்தங்களைச் செய்து வந்த,— வருகிற சுயமரியாதை இயக்கம் அவர் கண்ணிற்கோ கருத்திற்கோ ஒரு சிறிது எட்டியதாகவும் எழுதவில்லை. எப்படி எழுதுவார் பாபம்? அவர் உடலில் ஓடுவதோ ஆரிய இரத்தம், அவர் கருத்திலோ நாம் எதிரிகள் என்ற நினைப்பு. இந்த மன நிலையிலே அவர் பேனா எப்படி நம் தொண்டினைத் தீட்ட-குறிப்பிட முற்படும்!

இப்படிப்பட்ட சரித்திர ஆசிரியர்களினால்தான், தமிழகத்தின்,

திராவிடத்தின் சரித்திரமே சரியாக வும் தெளிவாகவும் தெரியாமல் போயிற்று.

பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் சமுதாயத்திலுள்ள வளைவுகளை நிமிர்த்துவதற்காகவும் தமிழ் நாட்டில் சுயமரியாதைக்காரர்கள் காட்டிய அக்கரையும், அதற்காக அவர்கள் ஏற்ற கல்லடியும் சொல்லடியும் கொஞ்சமல்ல!

தமிழ் நாட்டிலே நாம் விதவா விவாகத்தைப் பற்றி எவ்வளவோ பேசியும் எழுதியுமிருக்கிறோம். பல திருமணங்களையும் நடத்தி வைத்திருக்கிறோம்.

விதி, முன் ஜென்மபலன் என்ற வெட்டி வேதாந்தங்களைப் பொய்யாக்கி ஒரு பெண்ணின் கணவன் இறப்பது அவன் விதியினாலோ, முன்ஜென்ம கர்மத்தினாலோ அல்ல என்பதை வலியுறுத்திக் கூறி வந்திருக்கிறோம்.

'காதல் சுரக்கின்றநெஞ்சத்திலே கெட்ட கைம்மையைத் தூர்க்கா திர்! ஒரு கட்டழகன் திருத்தோளினைச் சேர்ந்திடச் சாத்திரம் பார்க்காதிர்'

என்று பண் அமைத்துப் பாட்டிசைத்தது சுயமரியாதைக்காரன் தான்.

ஆரியம் நம் நாட்டில் நுழைந்ததும், பல் சாதிப்பிரிவுகளும் நாட்டில் நுழைந்தன. ஒன்றுபட்டிருந்த நாம் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டு வலிவிழந்தோம்! வாழ்விழந்தோம்! வறுமையில் சிக்கி வதைகிறோம்!

நாம் இருபத்தைந்து ஆண்டுகளாகவே கலப்பு மணத்தை ஆதரித்துப் பேசியும், கதைகளாகவும் கட்டுரைகளாகவும் தீட்டியும் வந்திருக்கிறோம். எவ்வளவோ கலப்பு மணங்களைச் செய்வித்தும் இருக்கிறோம். ஆனால் அதற்காக எதிர்ப்பையும் பழிச் சொல்லையும் பரிசாகப் பெற்றோமே ஒழியப், பாராட்டு மொழி பெற்றோம இல்லை.

ஆனால் அன்பர் ஆச்சாரியார் இரண்டாண்டுகளுக்கு முன்பு பம்பாயில் கலப்பு மணம் தேவை என்று பேசினார். உடனே தேசியப்பத்திரிகைகள், நாட்டிலே முதன்முறையாக, யார் உள்ளத்திலும் எழாத சீர்திருத்தக் கொள்கை ஆச்சாரியாரின் அறிவுத்தடாகத்திலே, அரும்பிப் பூத்த செக்கச் சிவந்த செந்தாமரைக் கருத்தைப் போலப்பாராட்டின! அவ்வளவு இனவெறி அவர்களிடம் தாண்டவமாடுகிறது!

ஒரே கொள்கை! நம் தலையில் கல்லாக விழுந்தது, ஆச்சாரியார் கழுத்தில் மலர்மாலையாக விழுந்தது! அவர் இனம் வேறு, நம் இனம் வேறு என்ற வித்யாசத்தைத் தவிர்த்து வேறென்ன காரணம் கூறமுடியும்?

பெண்களுக்காகப் பரிந்து பேசுவதும், எழுதுவதும் ஆண்களாகவே இருக்கும் இன்றைய நிலைமை மாறவேண்டும். பெண்களும் கருத்தோவியங்களைத் தீட்டவேண்டும். தங்கள் கஷ்டங்களை அவர்களே எழுதினால்தான் உள்ளது உள்ளபடியேயிருக்கும். படிப்போர் உள்ளத்தையும் உருக்கும்! நம் நாட்டுப் பெண்மணிகள், ருஷிய நாட்டுப் பெண் எழுத்தாளர் வாண்டாவாஸிலெவ்ஸ்காவைப் போல எழுத வேண்டும். அந்த இன்பப் புதிய நாள் எந்நாளோ?

பேர்வாள்
சந்தா விவரம்

ஓராண்டு	ரூ.	6—8—0
6 மாதம்	ரூ.	3—4—0

பேர்வாள் அலுவலகம்
181, பிராட்வே, சென்னை 1.

விருந்தூட்டும் நூல்கள்!

பெரிய இடத்துப் பெண் (மு. கருணாநிதி) [அழகிய மூவர்ண மேலட்டை]	...	0	8
செங்கிஸ்கான் (மா. தங்கவேலர்)	...	1	0
தொடுவானம் (கவிஞர் வாணிதாசன்)	...	0	12
தூக்குமேடை (மு. கருணாநிதி)	...	1	8
நச்சுக்கோப்பை (மு. கருணாநிதி)	...	0	12
தப்பிவிட்டார்கள் (மு. கருணாநிதி)	...	0	6
கழைக்கூத்தியின் காதல் (பாரதிதாசன்)	...	1	0
துரோகி (தில்லை - வில்லாளன்)	...	2	0
அவள் வாழ்வு (ஆசைத்தம்பி)	...	0	8
அறிஞர் அண்ணாதுரை (மா. இளஞ்செழியன்)	...	0	8
பெண்களை நம்பலாமா? (கலைமணி)	...	0	4

எல்லா வியாபாரிகட்கும் தக்க லாபமுடன் எங்கள் செலவிலேயே அனுப்பிவைக்கப்படும்.

விவரங்கட்கு:—

திராவிடன் பதிப்பகம்
P. B. No. 18, வேலூர் N.A,

ஒரே ஒரு விட்மன்!

[தில்லை—மறைமுதல்வன்]

"காலம் என்னும் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து கொள்ளாதவன் சிறந்தவியாகமாட்டான். அவன் கோர்ட்டுகளில் உள்ளவர்களைப்போல, ஒரு காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து வைக்கும் ரிகார்டு பேர்வழியே ஆவான்......"

இது எப்போதோ எங்கேயோ அறிஞர் அண்ணா கூறிய சொற்கள்! ஆனால் இந்த வார்த்தைகளில் பின்னிக் கிடக்கும் கருத்துப்படி திகழ்ந்த கவிஞன் ஒரே ஒரு அமெரிக்க கவிஞன்—யாரெனறால் அது வால்ட் விட்மனாகத்தான் இருக்க முடியும்! ஏனெனில், வால்ட்விட்மன், தன் காலத்திற் கேற்றவாறு கவிதை எழுதவில்லை! தன் காலத்தை மட்டும் படம்பிடித்துக் காட்டிவிட்டுப் போகவில்லை! அவன் எதிர் காலத்தையே நிர்மாணித்தான்! அவன் எதிர் காலத்தின் சிருஷ்டிகர்த்தா! ஆகவேதான் அவன் இன்றும் போற்றப்பட்டிருக்கிறான்—என்றும் போற்றப்படுவான்! அவனுடைய கவிதைகள் காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்படாது நீடித்து நிலைத்து நிற்கின்றன என்றால் அதற்குக் காரணம் இதுதான்.

வறுமையும் வாட்டமும் அறியாத இனத்திலோ பசியும் பட்டினியும் தெரியாத வர்க்கத்திலோ அல்ல அவன் பிறந்தது! சீமானின் செல்லப்பிள்ளையல்ல அவன்! உழைத்தால்தான் வாழ முடியும் என்ற நிலையுள்ள ஒரு குடும்பத்தில்தான் பிறந்தான் வால்ட் விட்மன். அன்றாட வாழ்க்கையே தாளம் போடவேண்டிய நிலையிலுள்ளவன் அவன்! ஆனாலும் கவிதையுள்ளம் படைத்தவன்.

விட்மன் சின்னஞ்சிறு வயதிலேயே இயற்கையழகில் ஈடுபட்டான். பச்சைப் பசேலென்று விரிந்து கிடக்கும் வயல்கள்—சலசலவெனச் சத்தமிட்டோடும் சிற்றாறு—பூரித்தெழுந்த கடலில் ஒன்றை ஒன்று தழுவி விளையாடும் அலைகள்—நீலநிற ஆகாயத்தில் சிறகடித்துப் பறக்கும் சின்னஞ்சிறு அழகான பறவைகள்—இவற்றையெல்லாம் காண்பதில் அவனுக்கு அடங்காத ஆசை! காலையிலெழுந்ததும் தோட்டத்தை நோக்கி ஓடுவான். அங்கே அப்போதுதான் மொட்டு விரித்து மணம் பரப்பும் மலர்களைக் கண்டான். தவழ்ந்து வரும் தென்றலில் அழகாக அசைந்தாடும் அந்த மலர்களைச் சுற்றி வட்டமிடும் வண்டு—கதிரோனின் ஒளிபட்டு மின்னும் அதன் சிறகுகள்—உள்ளத்தை அள்ளிக்கொள்ளும் அதன் ரீங்கார இசை—எழில் தவழும் இந்தக் காட்சியில் சொக்கிப் போவான் கவிஞன் வால்ட்விட்மன். செக்கர் வானத்தைப் பார்த்துப் பூரித்துப்போவான்! ஒளி பொழியும் வண்ண நிலவினைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுவான்! இயற்கை இன்பம் என்னும் கடலிலே ஓயாமல் நீந்துவான்.

இப்படி இயற்கையோடு இயற்கையாக இணைந்துபோனான் விட்மன். இயற்கையின் இந்த இனிமையான தோற்றங்கள் அப்படியே அவனுள்ளத்தில் பதிந்தன! அவனும் அப்படிப் பதிந்த காட்சிகளைக் கவிதையாக—எழிலோவியமாக—ஆக்கினான், இலக்கணத்துக்கு உட்படாது! ஆம்......! எதுகை, மோனை, அடி, தளை, யாப்பு, அணி—ஆகிய இந்த இலக்கண வரம்புக்கு உட்பட்டுத்தான் கவிதை எழுதினார்கள் அக்காலப் புலவர்கள். ஆனால் விட்மன் சிந்தனைக்குச் சிறை கட்டும் இந்த இலக்கண வரம்பை உடைத்தெறிந்தான்! தன்னுடைய உள்ளத்துக்குச் சொல்லோட்டம் கொடுத்தான்! தன்னுடைய உள்ளத்திலெழுந்த உணர்ச்சிகளை—சிந்தனையில் மலர்ந்த எண்ணங்களை—எழுத்தோவியமாகத் தீட்டினான்!

அந்த எழுத்தோவியங்களில் இயற்கையின் இனிமையான தோற்றங்கள் தெரிந்தன. ஆனால் அதே நேரத்தில் புரட்சியின் மணமும் வீசத்தான் செய்தது! ஆம்! அவனுடைய கவிதைகளில் அவனுடைய உள்ளம் தெரிந்தது! இயற்கையை ரசிக்கும் தன்மை தெரிந்தது! ஆனால் அதே நேரத்தில் புதுமை எண்ணங்களும், புரட்சிக் கருத்துக்களும் குவிந்து கிடப்பதும் தெரிந்தது! இதற்குச்சரியானதோர் எடுத்துக்காட்டு அவனுடைய "புல்விதழ்" என்ற நூலே!

"புல்விதழ்" (Leaves of Grass)—விட்மன் உலகுக்குத் தந்த முதன்மையான நூல்! புதுமைக் கருத்துக்கள் பின்னிக் கிடக்கும் நூல்! மனிதனின் மதியை மழுங்கடிக்கும் மதம்—அந்த மதத்தின் காவலர்களாக உள்ள பாதிரிகள்—அந்தப் பாதிரிகள் கற்பித்த கடவுளைப்பற்றிய கற்பனைக் கதைகள்—அந்தக் கதைகளை நம்பி ஏமாறும் பாமரர்கள்—அந்தப் பாமரர்களை அடிமைப்படுத்தி வாட்டி வதைக்கும் செல்வச் சீமான்கள்—இப்படிப்பட்ட ஒரு நிலையையே தகர்த்தெறியும் நூல்! அந்தப் புத்தகத்திலே விட்மன் எழுதுகிறான்............

'பழைய கட்டுப்பாடுகளையும், தளைகளையும் உடைத்தெறிந்து கவிதைக்கும் வசனத்திற்கும் புதிய சுதந்திர ஓட்டம் தருகிறேன். ஆசான் என்னும் பாரேன். அவன் எழுதிய வழக்கமான கருத்துக்களைத் தகர்த்தெறிவேன்; இதை அறிந்தோர் என் சுதந்திர மனதைப் போற்றுவது உறுதி. உள்ளத்தை வெளிப்படையாக, சீர்தளைகளுக்குக் கட்டுப்படாமல், தைரியமாகச் சொல்பவனே கவிஞன். அவன் எதுகை மோனையின், அடிமையல்லன்; சொல்லிற்கும், யாப்பிற்கும், இலக்கணத்துக்குங்கூட அவன் அடிமையல்லன். அவன் அவற்றின் தலைவன்; கருத்தின் முதல்வன்; அவன் ஒரு சிருஷ்டிகர்த்தா; அவனே மகாகவன்;

இப்படி, கவிஞன் என்றால் யார்? என்ற கேள்விக்கு விளக்கந்தந்துவிட்டுமேலும் எழுதுகிறான் விட்மன்.........

"மனிதா! நீ யாருக்கும் தலை வணங்காதே; நிமிர்ந்து நட; கை வீசிச் செல்; உலகைக் காதலி! காதலில் கூசாதே! செல்வச் செருக்கரை, கொடுங்கோல் அரக்கரை, மதவெறியரை ஒதுக்கித் தள்ளி, உன் மனச்சாட்சியைப் பின்பற்றி நட; ஏழைகளிடம் இரக்கங்கொள்; தொழிலாளிகளுக்கு ஆறுதலளி, பாடுபடும் கூலிகளிடம்

பரிவுகாட்டு; தாராளமாகத்தா; உழைப்பை மதி; ஊருக்குதவு! உனக்கு எட்டாத கடவுளைப் பற்றித் தெரிந்ததாகப் பிதற்றாதே! கோயிலுக்கும், புத்தகத்திற்கும் கட்டுப்படாதே! எதையும் சிந்தித்துப்பார்! உனது மனதிற்குப் பிடித்ததையே ஒப்பிச்செய்!........''

'உண்மையைச் சொல்லுகிறேன் ஆண் பெண் உறவைவிட உலகில் வேறு கடவுள் இல்லை! பழைய கால அற்புதப் பொய்களை நம்பாதீர்கள்! இதோ உடல், உயிர், மனம், ஆன்மா உள்ளன! இவற்றைக் கொண்ட ஆண் பெண் வாழ்வையே பூரணமாக்குங்கள். அகம்பாவக் கொடுங்கோலரை வீழ்த்துங்கள்; தாழ்த்தப்பட்டவரை உயர்த்துங்கள்! பழைய கொடுங்கோல பித்தரை எள்ளித்தள்ளுங்கள்! தான் என்று செருக்காடி, மேடையில் ஜம்பமடித்துப் புகழ் வேட்டையாடும், பரம்பரை அரசியல் வாதிகளையும், போலிப் பகட்டரையும் புரட்டித் தள்ளுங்கள்! நான் எனது மனத்தை ஒளியாமல் வெளிப்படையாகப் பேசுகிறேன், நடுத்தெருவில் எல்லார் முன்னும் வந்து எனது உள்ளத்தை உள்ளபடி வெளியாகப் பேசுகிறேன்......',

இதையெல்லாம் கூறிவிட்டு கடைசியில் ஓரிடத்தில் விட்டமன் கூறுகிறான்

''கேளுங்கள் எனது கட்சியை! இனி உலகில் புரோகிதர், சாமியார் அதிகாரம் நடக்காது. அவர்கள் காலம் மலையேறிப்போனது, இனி ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே உபதேசியாக இருப்பான். தன் நெஞ்சையே தொட்டுப் பார்த்து நிமிர்ந்து நடப்பான். உலகில் பழைய கட்டுப்பாடுகள் ஒழியும்; புதிய சுதந்திர இனம் ஓங்கும்!...........''

இப்படியெல்லாம் எழுதியிருந்தது அக்காலப் புலவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகவேதான் அவனைத் தூற்றினார்கள். அவன் கவிதையை இகழ்ந்தார்கள். இன்று நம் நாட்டு அறிவு சூன்யங்கள் திராவிட இயக்க எழுத்தாளர்களை எள்ளி நகையாடி ஏசிப் பேசித் தூற்றுவதைப்போலத்தான் அன்று அமெரிக்க நாட்டுப் பத்தாம் பசலிகளும் கவிஞன் விட்டமனை ஓயாமல் தூற்றினார்கள். ''தப்பியோடிய பைத்தியம்', (Escaped Lunatic) என்று கேலி செய்தார்கள்.

ஆனால் விட்டமன் இந்த எதிர்ப்பைக்கண்டு அஞ்சவில்லை. அவன் கூறினான், ''நான் என் கவிதைகளைத் தனித்து ஒருவருக்கோ, தனி நாட்டிற்கோ பாடவில்லை; மனித சமுதாயம் முழுவதற்கும் பயன்படட்டும் என்றே பாடுகிறேன். பண்டைய பழக்கங்களிலிருந்து விடுபட்டு ஆணும் பெண்ணும் புதிய சுதந்திர வாழ்வு வாழவேண்டும். மனிதனை மனிதன் சமமாகக் கருதவேண்டும் என்பதே என் ஆசை. நான் குறுகிய மனப்பான்மைகளையும் சாதி நிறச் சழக்குகளையும், சாஸ்திர, இதிகாச கற்பனைகளையும் உடைத்தெறிந்து, எல்லாரும் சரிநிகர் சமானராக வாழும் பூரண ஜனநாயகத்தை நிலை நாட்டவே விரும்புகிறேன். எனது ஜனநாயகம் இன்னும் வரவில்லை; வருங்காலத்தில்தான் அது உருவாகவேண்டும்!''

அறிவுப் பஞ்சங்களும் ஒன்றுந் தெரியாததுகளுந்தான் வால்ட் விட்மனைத் தூற்றினவே தவிர அறிஞர்கள் போற்றாமலில்லை!

வால்ட் விட்மன் எழுதிய ''புல்லிதழ்''—அது அற்புதமான ஞானச் சுரங்கம் அமெரிக்கா இதுவரை இப்படிப்பட்ட நூலைக் கண்டதில்லை. இந்நூலில் இணையற்ற புதுமை பொலிகிறது. நமது அமெரிக்காவுக்கு அற்புதமான மனிதனொருவன் பிறந்திருக்கிறான். விட்மனின் கவிதைகள் வருங்கால உலகை ஆளும். அவை சுதந்திரக் கவிதைகள். உள்ளத்தினின்றும் இயல்பாக ஊறிக் கசிந்த கவிதைகள்' என்று கூறினார் அறிஞர் எமர்சன் (Emerson) ''ஆயிரம் உபதேசங்களைவிட, இப் புத்தகம் சிறந்தது'' என்று கூறினார் தோரோ (Thoreau) என்ற அறிவாளி! ஸைமண்ட்ஸ் (Symonds) என்ற அறிஞர் ''என் வாழ்வுக்கு மிகவும் பயனுள்ளது புல்லிதழே! அது என் எலும்பிலும் நரம்பிலும் ஏன் என் உடல் முழுவதும் ஊறிப் போயிருக்கிறது'' என்றார்! டென்னிசன் என்ற கவிஞர் ''இவர் ஒரு மிகப் பெரிய அறிவாளி'' என்று விட்மனைப் பற்றி கூறினார்!-இப்படி அறிஞர் பலரும் விட்மனை மனமாரப் போற்றிப் புகழ்ந்தனர்.

விட்மன் எழுத்தளவிலே மட்டும் புரட்சியாளனாக இருக்கவில்லை. செயலிலேயும் தன் கொள்கையைக் கடைப்பிடித்தான்! ஆம்!

வால்ட் விட்மன் வாலிபப்பருவத்தை அடைந்தபோது அவனுடைய உள்ளத்தில் பலவகைப்பட்ட உணர்ச்சிகள் கொப்பளித்தன! அவனுடைய காதற்கனல் வீசும் கண்களுக்குத் தவழும் தென்றலாகவும் அசையும் பூங்கொடியாகவும் மணம் வீசும் மலராகவும், பேசும் பொற்சிலையாகவும், பால் வண்ண நிலவாகவும் தெரிந்தாள் மாதொத்தி. அவளுடைய குளிர்மலர்ப் பார்வையிலே சொக்கிப்போனான் விட்மன்! அவளும் அவனுடைய அறிவொளி வீசும் கண்களில் கட்டுண்டாள். காதல் இருவரையும் இணைத்தது ஆனால், நடுவே புரோகிதர் வரவில்லை! திருமணச் சடங்குகள் நடைபெறவில்லை! சாத்திர சம்பிரதாயங்கள் தேவைப்படவில்லை! ஆனாலும் அந்த இரண்டு இருதயங்களின் கூட்டுறவில் இன்பம் பிறக்கத்தான் செய்தது! அவர்களும் அந்த இன்பத்தில் மகிழத்தான் செய்தார்கள்! திருமணம் என்பது சடங்கு சம்பிரதாயங்களின் கூட்டுறவு அற்றதாக இருக்கவேண்டுமென்று புரட்சிக் குரல் எழுப்பி வந்த விட்மன், தன் திருமணத்தை அவ்விதமே நடத்தி முடித்தான். சொல்லின் செல்வனாக மட்டுமல்ல செயல் வீரனாகவும திகழ்ந்தான் அந்தப் பெருங்கவிஞன். புரட்சிக் கருத்துக்களின் இருப்பிடமாம் ''புல்லிதழ்களை'' ஆக்கித் தந்தபின் விட்மன் மேலும் பலப் பல புத்தகங்களை எழுதினான். இன்று அவையெல்லாம் உலக இலக்கிய வரிசையில் முதன்மையாக நிற்கின்றன! அவற்றிலே மிகவும் குறிப்பிடத்தக்கது ''எனது பாடல்'' (Song of myself) என்ற நூலேயாகும்! தன்னுடைய உள்ளத்தை-உள்ளத்திலெழுந்த உணர்ச்சிகளை—மனதிலே மலர்ந்த எண்ணங்களையெல்லாம் அதிலே அப்படியே படம்பிடித்துவிட்டான். அதில் எழுதுகிறான்......

''நான் உலக சமுதாயத்தில் ஒருவன், தனிச் செருக்கில்லாத [illegible] பேர்வழி. நான் எல்லோருடனும் கைகோர்த்து உல்லாசமாகச் செல்வேன், நான் ஆகாயத்தை உதவிகேட்டுக் கைதொழுவதில்லை. உழைப்பினால் பிழைத்து, எவர் பொருளையும் அபகரிக்காமல், உள்ளதைக் கொண்டு வாழ்வேன், நான் மனித சமுதாயத்தோழன்!... ஏழை—செல்வன், புண்ணியன்—

பாபி, பத்தினி—பரத்தை, ஆண்டான்—அடிமை, என்ற வேறுபாடு எனக்கில்லை. எல்லோரையும் எனது விருந்துக்கு அழைக்கிறேன். மகிழ்ச்சியோடு வாருங்கள்! எல்லோரையும் கைவிரித்துத் தழுவி அன்புடன் வரவேற்கிறேன். எனது உதடுகள் எல்லோரையும் கொஞ்சும். என் மார்பு எல்லாரையும் தழுவிக்கொள்ளும், என் உள்ளத்தில் எல்லார் உள்ளமும் பிரதிபலிக்கும்......எனக்கு, சாதி—மதம்—நாடு—இனம்—நிறம் என்கிற வேற்றுமைகள் கிடையாது உலக மனிதர்கள் அனைவரும் என்னுடைய இனம், என்னுடைய சாதி. எல்லோரும் என் சகோதரர்கள். எல்லோரும் என் தோழர்கள். நான் எதற்கும் அஞ்சேன்; அழேன்; வருந்தேன். உலகே, நீ அழுவதேன்? நான் எதையுந் தொழேன்; சடங்கும் தொழுகையும் எனக்கில்லை. நான் அணுஅணுவாக என்னை ஆராய்ந்தறிந்தவன். நான் நானே! நான் அமரன்; அகாலன்; தொல்லையில்லாத சுதந்திரன்! எந்தக் குருக்களிடம் நான் மன்னிப்புக் கேட்கவேண்டும்? நான் மோட்சந் தேடவில்லை, இருக்குமிடத்தில் இருக்கிறபடி இருக்கிறேன்; பிறர் என்னை என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டும். பிறருக்கு நான் கட்டுப்படமாட்டேன். எனக்குத் தெரிந்த உலகம் ஒன்றே; அது, அகண்ட உலகினும் பெரிய உலகம்! அது நான், நானே!........"

"நான் மனிதரை மட்டுந்தான் நேசிக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? நான் விலங்குகளையும் பறவைக் கூட்டங்களையும் நேசிக்கிறேன். ஏன் தெரியுமா? பசு பட்சிகள் எதற்கெடுத்தாலும் முணுமுணுப்பதில்லை. கோயில் கோயில் என்று கதறுவதில்லை. மோட்சம் நரகம் என்று பிதற்றுவதில்லை; யாரையும், எதையும் தொழுவதில்லை; கடவுளையும் குருக்களையும் பற்றிப் பேசி என் காதைத் துளைப்பதில்லை; அவைகளுக்கு இல்லையென்ற கவலையுமில்லை! இரும்புப் பெட்டியை இழுத்துப் பூட்டும் பைத்தியமுமில்லை; சொத்து சொத்து என்று அலையும் பேதைமையும் இல்லை. ஒன்று மற்றொன்றைத் தான் பணிவதில்லை! தங்கள் முன்னோருக்கும் பணிவதில்லை! அவைகளிடையே சடங்கு சங்கடங்கள் இல்லை! என் கொள்கையும் அவற்றின் கொள்கையும் ஒன்றே தான்!"......................"

இப்படிப்பட்ட நல்ல நல்ல கருத்துக்களை மனித சமுதாயத்துக்குத் தந்த விட்மனை அன்று தூற்றினார்கள். ஆனால் இன்று போற்றுகிறார்கள். அவனுடைய புகழ் பன்னாடுதோறும் பேசப்படுகிறது. அவனுடைய கவிதைகள் உலக அறிஞர்களால் போற்றப்படுகின்றன. அதே போலத்தான் இன்று இகழப்படும் நம் கருத்துக்கள், அலட்சியப்படுத்தப்படும் லட்சியங்கள் வருங்காலத்தில் போற்றப்படும். இன்று கேலி பேசப்படும் நம் கொள்கைகள் வருங்காலத்தில் செயல்களாக மலர்ந்து மணம் வீசும்! விட்மனின் வாழ்வு நமக்கு இதைத்தான் உணர்த்துகிறது—மேலும் மேலும் பணியாற்றத் தூண்டுகிறது!

பகுத்தறிவு வாதிகளுக்குப் புதுப் பாதை அமைத்துத் தந்த—பழைய சாத்திரக் குப்பைகளுக்குத் தீ வைத்த—பாதிரிகளுக்கும் சீமான்களுக்கும் அஞ்சாது தன் மனதிற்பட்ட கருத்துக்களைத் தக்க தடையின்றி எடுத்துச் சொன்ன—அமெரிக்கர்களெல்லோரும் "இதோ பாரீர், எம் விட்மனின் கவிதைகளை" என்று பூரிப்போடு கூறி பீடுநடை போட்டு உவப்போடு உலவிடும் வகையில் கருத்துச் சுரங்கங்களை ஆக்கித்தந்த—விட்மன், ஒருவன்தான் உண்டு! ஆம்......! வான் வைக் ப்ருக்ஸ் ((Van Wyck Brooks) என்ற அறிஞர் கூறுவது போல, "ஒரே ஒரு விட்மன்தான் உண்டு! ஆழம், உருக்கம், கவர்ச்சி மிக்க தோற்றங்களோடு, திண்மையும், செறிவும், சீர்மையும், கூர்மையும் கொண்டு நம் உள்ளத்தைத் தொடும் அமெரிக்கக் கவி, ஒரே ஒருவனே உண்டு" (There is only one Walt Whitman, one American poet who comes home to us with that deep, moving, shaking impact of personality With a certain density, Weigut, richness and poignacy)

அந்த "ஒரே ஒரு விட்மனி"ன் சிந்தனையிலே பட்டுத் தெறித்த முத்துக்களில் சிலவற்றை இதோ படித்துப் பாருங்கள்

* * *

"துயர்கள் என் சட்டை மாற்றங்களில் ஒன்று"

"சென்றதைப் பின்னே விட்டு, வேறு புதிய பேருலகை நோக்குகிறேம். நாம் அடையும் உலகு, தொழிலுலகு! நாம் செல்லும் புதிய உறுதியுலகு! அதற்கு வழி துலக்குவீர்"

* * *

"பெரிய எண்ணங்காள்; மனித சாதியின் ஆவல்காள்—வீரத்தன்மைகாள்—நீங்கள் என் தெய்வங்களாக இருங்கள்"

* * *

"நரகம் என்னும் பூச்சாண்டி எனக்குத் தூசி மாத்திரம்! சுவர்க்கம் என்னும் மாயவலையும் எனக்கு அணு மாத்திரம்."

* * *

"மனிதனே! உன்னைவிட மேலான கடவுள் உலகில் வேறொன்றுமில்லை. (There is no God any more Devine than Yourself)"

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

'விளங்காத சொல் நிறைந்த
பாட்டைக் கேட்டு
மிக இனிமை மிக இனிமை
என்பார் உண்டு;
உளம் சிந்திக் கிடக்கின்ற
பதரைப் பார்த்துக்
களிப்படையும் சிறுவரிவர்;
நல் மனத்தை
இளக வைப்ப தெவர்பாட்டு?
பேர்முகத்தே
எழுச்சியுறச் செய்வதியார்
பாட்டு? மற்றும்
உளம் வாட்டுங் கொடுந்துயரை
மாற்றுகின்ற
ஓசை நிறை பாட்டுகளைத்
தமிழ்ப்பாட்டேயாம்!"

"தமிழ்ப்பாட்டு இனிமை மிகுந்ததுதான். ஆனால் என் குரல் அவ்வளவு இனிமையானதா?"

"தமிழ்ப் பாட்டின் இனிமையை மெருகு குலையாமல் அப்படியே வெளிப்படுத்தியது உன் தேன் குரல்தானே!..."

திகைப்பில் பதில் கூறமுடியாமல் உயர்ந்த தன் கண்களால் விழுங்கிவிடுபவனைப் போலப் பார்த்திட்டாள்.

"அந்த இனிய குரலை இன்னொருமுறை......" இழுத்தான்.

"நாளைக்கு நான் உங்களை அரண்மனையிலே சந்திக்கிறேன். அப்பொழுது..."

"அப்பொழுது என் செவிக்கும் ....நல்ல விருந்து உண்டு?"

(16-ம் பக்கம் பார்க்க)

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

மேயல்லாது, விந்து வேறு—நாதம் வேறாக இருக்கவே முடியாதென்பது அனைவருமறிந்ததே. ஆனால் பிரமவிந்து தனியே இருந்தது போலும். மகளைக் கூடிக் கற்பழித்துக் கருக்கொள்ளச் செய்த பிரமா, அவன் பிள்ளை பெற்றுவிட்டால் தனக்கு அபவாதம் வருமென எண்ணி அக்கருவை அழித்துவிட்டிருப்பதையே இப்படி அக்கால மௌட்டியக் கபோதிப் புலவர்கள் வரலாறாக—புராணமாக எழுதி வைத்துவிட்டார்கள்.

இந்தக் கதைகளோ, பிரமனுடைய செயலோ இவற்றை எழுதி வைத்த ஆரியப் புலவர்களுடைய மூளையோ பற்றி நமக்கு அக்கரையில்லை. ஆரியர்களுடைய நாகரிகமும், அவர்களுடைய வேத புராண இதிகாச சாஸ்திரங்களும், ஆரியக் கடவுள்களும், அவர்களுடையபண்பும் கலைகளும் அவர்களுடைய தேவ மொழியாம் சமஸ்கிருதமும் இப்படித்தான் இருக்கும்—இருக்கின்றன.

ஆனால், இவற்றையெல்லாம் கடவுளகளென்றும், கடவுள் கதைகளென்றும், தெய்வீகமானவை யென்றும், இவற்றை எழுதி வைத்தவர்கள் பேரறிஞர்களான மகரிஷிகள் என்றும் நம்புகின்றார்களே திராவிடர்கள்—இவர்கள் மூளையைக் கண்டுதான் நாம் பெரும் வியப்படைகிறோம்.

மகளைக் கற்பழிப்பதும், பின் மகனுக்கு மனைவியாக்குவதும் நாட்டியக் கச்சேரியில் நடனமாடும் பெண்ணைக் கண்டதும் காம வெறி கொள்வதும், மணப்பெண்ணின் தொடையைப் பார்த்து மோகலாகிரியடைவதும், தான் படைத்த பெண்களையே கற்பழிப்பதும், விலங்குப் புணர்ச்சி செய்வதும் பெண்ணோ என்று அலைவதும், இணங்க மறுக்கும் பெண்களையும் விரட்டிக்கொண்டோடிப் பலவந்தமாகக் கெடுப்பதுமான தொழிலைக் கொண்ட ஒரு பிரகிருதியை-உயர்ந்த நாகரிக மரபில் உதித்த எந்த அறிவுள்ளவனாவது கடவுள் என்று ஒப்புக்கொள்வானா? இந்த லட்சணத்தோடு ஒரு மனிதன் இருக்கிறானென்றால், அவனை மனிதனென்றாவது மதிக்க மக்கள் மனம் இடந்தருமா? இந்தக் கடவுள்களின் செயல்களையெல்லாம் கேட்கக் கேட்க வெட்கமாக இல்லையா? தோழர்களே! சிந்தித்துப் பாருங்கள்!

இத்தகைய இழிதகைமை வாய்ந்த கடவுள்கள்—வேத புராண இதிகாசங்கள்—திராவிட மக்களுக்குத் தேவையா? திராவிடர்களின் நாகரிகம், கலை, பண்பு, மரபு எவ்வளவு உன்னதமானவை? இப்படிப்பட்ட உன்னத நாகரிகமுடைய மக்கள், மேற்கண்ட அநாகரிக ஆரிய ஆபாசச் சேற்றை வாரிப் பூசிக் கொள்ளலாமா? சிந்தித்துப் பார்த்து ஒரு நல்ல தீர்ப்புக் கூறுங்கள்.

தி. மு. க. பொதுக் கூட்டம்

மலையாள பகுதியிலுள்ள இவ்வூரில் தி. மு. க. வின் ஓர் பொதுக் கூட்டம் 12—3—52ல் திருவனந்தபுரம் தோழர். A. கிருட்டினன் தலைமையில் நடைபெற்றது. மேற்படி கூட்டம் பொதுசெயலாளரின் அறிக்கைபடி வடநாட்டு கவர்னர் ஆட்சியை எதிர்த்து நடைபெற்றதாகும். கூட்டத்தில் பாலராமபுரம் தோழர். A. அருணாசலம் அவர்கள் மலையாளத்திலும் நாகர்கோவில் தோழர். இ. மனோகரன் தமிழிலும் பேசினர். தோழர். மனோகரன் பேசிக்கொண்டு நிற்கும்போது இந்துமதத்தின் பேரில் வகுப்புக் கலவரம் நடத்த எண்ணி திட்டமிட்டிருக்கும் ஒரு சில காலிகள், மனோகரன்மீதும், ஒலிபெருக்கியின் மீதும், கூடியிருந்த மக்கள் மீதும் கல்லை வீசி எறிந்தனர். வெகுண்டு ஆத்திரத்துடன் எழுந்த மக்கள்கூட்டம் கல்லெறிந்தவர்களில் இருவரை பிடித்து இவ்வூர் போலீசில் ஒப்படைத்தனர். கூட்டம் மேற்கொண்டு தொடர்ந்து இரண்டு மணி நேரம் நடைபெற்று இரவு 9-30 மணிக்கு தலைவர் முடிவுரையுடன் முடிவடைந்தது.

மேற்படி கூட்டத்தில் வடநாட்டு ஆலோசனையாளர் திரு. கொச்சியில் நியமித்திருப்பதை கண்டித்தும், கட்டாய இந்தியை எதிர்த்தும், சென்னை அரசாங்கத்தாரால் தூக்குதண்டனை விதிக்கப்பட்ட ஏ. கி. பாலனின் தண்டனையை ரத்துசெய்ய கோரியும், மலேயா சர்க்காரால் ஐந்து வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் நாஞ்சில் நாட்டு தோழர் கன்னியாவை விடுதலை செய்ய கோரியும், இவ்வூர் பள்ளிக்கூடத்தில் தமிழ் மாணவர்களுக்கு வேண்டிய சலுகைகள் செய்யுமாறும், போதுமான தமிழ் ஆசிரியர்கள் இல்லாத குறையை நிவர்த்தி செய்யும்படியும் உள்ள தீர்மானங்கள் பொது மக்களின் கரகோஷத்துடன் நிறைவேற்றப்பட்டதோடு, கல்லெறிந்த மேற்படி காலிகளின் செயலில் கண்டித்து உடனடி வேண்டிய நடவடிக்கை எடுக்கும்படி ஆட்சியாளரை இக்கூட்டம் வேண்டிக்கொண்டது.

சேரன் தீட்டியவை

ஏன் மகன்—சிறந்த கற்பனைக் கதை—இன்பத் தமிழ்நடை 1—0—0

கலைக்கோயிலா—விபசார விடுதியா 0—8—0

இன்ப இரவு—கருத்தை அள்ளும் கற்பனை 0—8—0

பகுத்தறிவுப் பாசறை
181, பிராட்வே, சென்னை.

போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 22—3—52 சனிக்கிழமை

திராவிடப் பார்ப்பனர் சங்கம்

அக்ரமம், அநியாயம், அநீதி!

முழுப் பொய், பச்சை பேடித்தனம்!

கழுத்தை நெறிக்கும் கற்பனை!

கழுதையும் குதிரையும் இணைகிறது!

கலிகாலம் முற்றிவிட்டது!

இப்படி ஒருவர் மூச்சுக்கூட விடாமல் முணுமுணுத்துக்கொண்டிருந்தார் வீதியிலே. எங்கள் வீட்டுத் தெருக் கோடியிலே ஒரே கூட்டம். என்னமோ ஏதோ என்று விழுந்தடித்துக் கொண்டு ஓடினேன்.

முணுமுணுத்துக் கொண்டிருந்தவர் என்னைப் பார்த்ததும் நாட்டுக்கே ஆனர்த்தம். இந்த மாதிரி அக்ரமம் உண்டா? திராவிடப் பார்ப்பனராம்; வயிற்றிலே நெருப்பு பற்றி எரிகிறதே! என்று கூவினார்.

சுற்றுமுற்றும் பார்த்தேன். எதிரிலே ஒரு பலகை தொங்கிக்கொண்டிருந்தது. அந்தப் பலகையில் **தென்னிந்திய திராவிடப்** பார்ப்பனர் சங்கம் (South Indian Dravida Bramins Association) என்று எழுதப்பட்டிருக்கிறது.

உண்மை விளங்கிவிட்டது. அய்யங்காருக்கு ஆத்திரத்தை மூட்டியது அந்தப் பலகைதான் என்று உணர்ந்தேன்.

திராவிடப் பார்ப்பனர்—இந்த இரண்டு சொற்களும் அய்யங்கார் அடிவயிற்றிலே நெருப்பை மூட்டியிருக்கின்றன. கொந்தளித்துக் கொக்கரிக்கிறார். அவர் கண்கள் கனல் கக்குகின்றன. ரத்த ஓட்டம் முகத்திலே தேங்கி சிவப்பேறி இருக்கிறது. அந்த இரு சொற்களைக் கண்டு இவ்வளவு குமுறுவானேன்? அவை நாட்டிலே நடமாடாத சொற்களா!

திராவிடர்—பார்ப்பனர் — அவர் கேட்டுக்கேட்டுப்பழகிய சொற்கள்.

திராவிடப் பார்ப்பனர் — அவர் கேட்டிராத புதிய சொற்றொடர்,

திராவிடர்—பார்ப்பனர் இரண்டும் தனித் தனிச் சொற்களாக இருந்த வரையில் அய்யங்காருக்கு அளவற்ற ஆனந்தம்; சென்ற இடமெல்லாம் அவருக்கு அமோகமான வரவேற்பு. அவர் மலைபோன்ற தவறு செய்தாலும்—மாசற்ற மாணிக்கமாகவே இருப்பார். வளமும் நலமும் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையாக அவர் வாழ்க்கை விளங்கும்.

ஆனால் மற்றவர் வாழ்வோ பயிர் பச்சையற்ற பாழ் நிலம், வளம் கண்டறியாத மணல் வெளியாக இருக்கும்.

திராவிடப் பார்ப்பனர் என்ற இரண்டு சொற்களும் இணைந்து ஓரே சொற்றொடராக உச்சரிக்கப்படுமானால் ஆண்டவன் பிரதிநிதிகளும் அடிமைகளின் சின்னங்களும் நாட்டிலே காட்சி யளிக்க மாட்டார்கள். சுப்பண்ண சாஸ்திரிகள் கையிலே சொர்க்கவாசல் சாவியும் கருப்பண்ணன் கையிலே கலப்பையும் கடப்பாரையும் இருக்கமுடியாது. உழைத்து உருக்குலைந்து உயிர்விடும் கூட்டமும் உண்டு கொழுத்து மேனி பெருத்தோர் கூட்டமும் காண முடியாது. சாதிப்படிக்கட்டுகள் சடசடவெனத் தகர்ந்து எறியப்படும். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம் என்ற பரணி பாடப்படும். ஆகவேதான் திராவிடப் பார்ப்பனர் என்ற கூட்டுச் சொற்கள் அய்யங்கார் அடிவயிற்றிலே நெருப்பை அள்ளி வீசியிருக்கிறது;

கருமேகங்கள் சூழ்ந்து வானம் இருண்டு கிடந்தால பாம்புகளுக்குப் பரமானந்தம். விளக்கு அணைந்திருந்தால் திருடர்களுக்குக் கொண்டாட்டம். இருள் கப்பிக் கிடக்கிற வரையில் நெஞ்சிலே நஞ்சு கொண்டு உலவும் உயிர்களுக்கு இன்ப ஊற்று பெருகும். இருள் நீங்கினால்—சூரியன் தன் பட்டொளி பரப்பினால் அவற்றின் ஆனந்தம் அடங்குவது மட்டுமல்ல. அவை இருக்குமிடமே தெரிவதில்லை.

பல்லாயிரம் ஆண்டுகளாக திராவிட சமுதாயத்தில் காரிருள் கப்பிக்கிடந்தது. அதனை அகற்றவும், அறிவுச் சுடர் கொளுத்தவுமே திராவிடர் இயக்கம் இருபது ஆண்டுகளாகப் பாடுபட்டு வந்திருக்கிறது. பகுத்தறிவு வெள்ளத்தை சலசலவென கிராமம் கிராமமாகப் பாய்ச்சி இருக்கிறது. நெஞ்சிலே இருந்த பழமை அழுக்கு அந்த வெள்ளத்தால் அடியோடு துடைக்கப்பட்டது. திராவிட இளங்காளைகள் இன்று அகமும் முகமும் மலர, அஞ்சாமை ஆட்சி செய்ய; நடையிலே கெம்பீரம் கா சிதர பீடுநடை நடக்கிறார்கள். இன்பத் திராவிடமே எமது இலட்சியம் என்று கூறியபடி ஆயிரம் ஆயிரமாக—அணி அணியாக அருமைத் தம்பிமார்கள் கழகப் பாசறைக்கு விரைந்து வருகிறார்கள்.

திராவிடம் என்ற சொல் ஒலிக்கப் பெறாத இடமில்லை. அதனைக் கூறாத ஆள் இல்லை. சட்டசபையிலே திராவிடம் ஒலிக்கிறது. சன்மார்க்க சபையிலே திராவிடம் பேசுகிறது. மாணவர்களிடையே திராவிடப்பேச்சு. மக்கள் கூட்டத்திலே திராவிடப் பேச்சு. இதன் எதிரொலிதான் **திராவிடப் பார்ப்பனர் சங்கத்தின் தோற்றமாகும்.**

திராவிடப் பார்ப்பனர் சங்கம் வெறும் கற்பனையல்ல. சென்னை வால்டாக்ஸ் ரோடில் துவக்கி நடத்தப்படுவது.

திராவிடப் பார்ப்பனர்—என்ன கருத்து என்பது நமக்குத் தெரியாது. திராவிடர்களாக இருந்து பார்ப்பனராக மாறியவர்கள் என்ற கருத்திலோ திராவிட நாட்டிலே வாழும் பார்ப்பனர் என்ற கருத்திலோ அல்லது வேறொரு கருத்திலோ துவக்கப்பட்டிருக்கலாம். என்றாலும் திராவிடம் என்ற சொல்லோடு பார்ப்பனர் என்ற சொல்லைப் பிணைத்தது திராவிட இயக்கச் சூறாவளி என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஒழிந்தது திராவிட இயக்கம் என்று உரத்த குரலில் உலகு அதிர முழக்கமிட்ட கழிந்த பழம் பஞ்சாங்கங்கள் திராவிட இயக்கத்தின் திடுக்கிடத்தக்க பலத்தையும் வளர்ச்சியையும் கண்டு நெஞ்சுடைந்து குள்ளநரித் தந்திரமாக இந்தத் திராவிடப் பார்ப்பனர் சங்கத்தைத் துவக்கி இருக்கவுங்கூடும். எவருலும் கல்கி கும்பலின் களிப்புக்குக் கல்லறை எழுப்பிவிட்டது இந்தக் கழகம் என்பதை மறுப்பதற்கில்லை.

'ஒழிந்தது திராவிடர் இயக்கம்'

அழிந்தது சூனாமானாக்களின் ஆர்ப்பாட்டம்

தொலைந்தது திராவிடத் தம்பிகளின் தொல்லை,

என்று எழுதிய கல்கியாருக்கு திராவிட இயக்கம் இன்று தொலையவில்லை; மாறாக மிகவோங்கிவளர்ந்து பார்ப்பனர்களையும் திராவிடர்களாக உருமாற்றும் அளவுக்கு உரம்பெற்றிருக்கிறது என்று அந்தப் பலகை ஓயாமல் முரசடித்துக் காட்டும் என்ற கருதுகிறோம்.

திராவிடப் பார்ப்பனர்களாக இன்று திரிசங்கு சொர்க்கத்திலே தொங்கும் பார்ப்பனர்கள் நமது உழைப்பு மிகுந்தால்—பிரசாரம் மின்னல் வேகத்தில் நடந்தால் விரைவில் திராவிடர்களாகவே காட்சிதரும் காலம் வரும் என்பதை கல்கியாரே கருத்தில் வைத்துக் கொள்ளும்.

வாழ்க திராவிட இயக்கம்

சேலம் மாவட்ட தி. மு. கிளைக் கழகங்களுக்கு அறிவிப்பு

சேலம் மாவட்டத்தில் இருக்கும் எல்லா தி. மு. கழகச் செயலாளர்களும் தமக்குத் தேவையான உறுப்பினர் சேர்க்கும் ரசீது புத்தகங்களுக்கு உடனே நமது காஞ்சிபுரம் தலைமை நிலையத்திற்கு எழுதிவிட்டு, மாவட்டக் கழகத்திற்கும் தகவல் தெரிவித்துத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

குறைந்தது 25 உறுப்பினர்கள் சேர்ந்தால் ஒரு புதுக்கழகம் தோற்றுவிக்கலாம். கழகம் அமைக்க விரும்பும் புதிய ஊர்த் தோழர்களும் அவ்வாறே தலைமைக்கு எழுதிவிட்டுத் தகவல் தெரிவிப்பின் ரசீது புத்தகம் கிடைக்கச் செய்வதும், துவக்கும் கழகங்களை மாவட்டக் குழுவில் இணைத்துக் கொள்வதும் எளிதாக இருக்கும்.

மாவட்டக் கழகத்திற்குரிய கடிதப் போக்குவரத்துக்களை இனி அடியில் கண்ட முகவரிக்கு வைத்துக் கொள்ளவும்.

ஜி. பி. சோமசுந்தரம்,
செயலாளர்.

ப. கண்ணன்
விளம்பர உறுப்பினர்.

புதிய முகவரி:—

பி. ஆர். சோமசுந்தரம்,
துணைச் செயலாளர்.
சேலம் மாவட்ட
திராவிட முன்னேற்றக் கழகம்.
25, மாரிமுத்து முதலி தெரு,
அம்மாப்பேட்டை, சேலம்.

சென்னை மேல் சபை

வாக்குகளை எண்ணி முடித்து கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டனர்.

மதுரை-ராமநாதபுரம்-திருநெல்வேலி லோகல் போர்டு தொகுதியில் எஸ். ஓ. எஸ். பி. உடையப்பா, P. சிவசுப்பிரமணிய நாடார், டி. எஸ். சங்கரநாராயண பிள்ளை ஆக மூவரும் சென்னை-செங்கற்பட்டு-வடாற்காடு லோகல் போர்டு தொகுதியில் C. பெருமாள்சாமி ரெட்டியார், C. நாதமுனி நாயுடு, T. புருஷோத்தம் ஆக மூவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

கோவர்த்தனகிரியில் தோழர். T. சண்முகம் M.L.A. அவர்கட்குப் பாராட்டுக் கூட்டம்

19—3—52 புதன் மாலை 6-மணிக்கு தோழர் மதுரை அவர்கள் தலைமையில் பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. திரு. காஞ்சி. மணிமொழியார், N. V. நடராசன் இருவரும் நாட்டு நிலைமை, தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் கடமை, மக்கள்மீதுள்ள பொறுப்பு ஆகியவைகளை விளக்கிப் பேசினர். தோழர். T. சண்முகம் அவர்கட்கு ஒரு வரவேற்பிதழ் படித்து வழங்கப்பட்டது. அதில் ஐக்கிய ஜனநாயக முன்னணியில் சேர்ந்து நல்ல சர்க்கார் அமைய சண்முகம் பாடுபட வேண்டுமென்றும், கோவர்த்தனகிரிக்கு ஒரு ஆரம்பப் பள்ளியும் மருத்துவ விடுதியும் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தன. தோழர் சண்முகம் அவர்கள் அவைகளுக்குத் தக்க பதில் கூறியபின் நன்றி நவிலப்பட்டு இரவு 9½ மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

இலங்கை திராவிட முன்னேற்ற கழகம் முதலாவது மாநாடு

1952 மே மாதம் இரண்டாவது வாரத்தில் கொழும்பில் நடைபெறும்

தோழர்கள் N. V. நடராசன் மு. கருணாநிதி C. P. சிற்றரசு ஆகியோரை அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மதவெறி—அன்றும் இன்றும்

மக்களை நல்வழிப் படுத்தி—அன்பு, சகோதரத்துவம், சமத்துவம், ஒழுக்கம், ஒற்றுமை, நன்னெறி முதலியவற்றினைக் கடைப்பிடித்து ஒழுகுமாறு நடத்துவதற்கே மதங்கள் இருப்பதாக மதவாதிகள் கூறுகின்றனர்.

ஆனால், மதங்களால் இந்த நல்ல நோக்கங்களை மக்கள் கடைபிடிக்குமாறு செய்ய முடிந்ததா?

மதத்தின் பெயரைக் கூறிச் சிலர் இன்பவாழ்வு வாழுகின்றனர்! பலர் பாட்டாளிகளாய், பதைக்கப் பதைக்க உழைத்து உருமாறி அடிமைகளாய்-ஆட்டு மந்தை வாழ்வு வாழுகின்றனர்.

நெருங்கிப் பழகிய தோழர்கள் கழுத்தில் கத்தி பாய்ச்ச இடங்கொடுத்தது மதமல்லவா?

பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து விழக் காரணமாயிருந்தது மதமல்லவா?

மதத்தின் பேரால் அறிவு மங்க வைக்கப்படுகிறது; ஆராய்ச்சிக்கு முட்டுக் கட்டையிடப்படுகிறது; மனிதனின் பகுத்தறிவு இழந்து பாமரன் ஆக வழிசெய்வது மதமே அல்லவா? மனிதனை வீரமற்றவனாக—காட்டு மிராண்டியாக—அன்பும் இரக்கமும் இல்லாத அரக்கனாக ஆக்கியது மதமே அல்லவா?

மது அருந்தாதே! விபசாரம் செய்யாதே! சூது ஆடாதே! பொய் புகலாதே! கொலை செய்யாதே! களவாடாதே! என்ற நன்னெறிகளை எல்லா மதங்களும் போதிக்கின்றன. ஆனால் இவற்றை விடாமல் செய்பவர்கள் யார்? மதத்தைத் தழுவாதவர்களா? இவ்வளவையும் செய்பவர்கள் மதவாதிகள் தானே! மதுக் கடையில், பரத்தையர் இல்லத்தில், சூதாடுமிடங்களில், சிறைச் சாலைகளில் போய்ப்பார்! மடங்களில் போய்ப்பார்! யார் இக் குற்றங்களை நிறையச் செய்பவர்கள் என்பது புலனாகிவிடும்.

மதுக்கடை வைத்திருப்பவர்கள், சூதாட்டம் நடத்துபவர்கள், பரத்தையர்கள் யார்? அவர்களும் அப்பழுக்கற்ற மதவாதிகளே; ஆண்டவனின் அடியார்களே!

மதுக் கடையில் மகேஸ்வரன் படம் பார்க்கலாம்; சூதுக் கடையில் அப்படியே; பரத்தையர் தம் இல்லங்களில் பூஜை அறையொன்று தனியே நிறுவி, பரம பக்தைகளெனக் காட்டிக்கொள்வர். அதிகம் ஏன்? மகேஸ்வரனே மதுவருந்துவதாகப் புராணங்கள் கூறவில்லையா? சூதாட்டத்தில் திளைத்த கடவுளகளைப் பற்றிய கதைகள் பல புராணங்களில் இல்லையா? விபசாரத்தில் மூழ்கிய கடவுள்களின் லீலா விநோதங்களைப் பற்றி வண்டி வண்டியாகப் புராண இதிகாசங்கள் இல்லையா? ஆகவே, மதம் இவ்வொழுக்கக் கேடுகளைப் போக்குவதற்குப் பதில், மதத்தின் கர்த்தாக்களே இவற்றைச் செய்திருப்பதாகப் போதிக்கிறதே!

மதங்களால் இவ்வொழுக்கக் கேடுகளைப் போக்க முடிந்ததா? ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உழைத்தும் மதங்களால் முடியாத வேலையை—மனிதன் சட்டம் போட்டுத் தடைசெய்வதன் மூலம் ஒரே நாளில் தடுத்துவிட முடிகிறதே! எது பெரிது மதமா? மனிதனா? எது தேவை மதமா? மனிதத் தன்மையா?

"மதம் என்றால் குருட்டு நம்பிக்கை, வெறி, பிற்போக்கு, ஆராய்ச்சிக் கடங்காத கொள்கை, மூட பக்தி, சரண்டல், சுய நலக் கொள்கை' என்பதே எனக் கூறுகிறார் பண்டித ஜவஹர்லால் நேரு

"மனிதன் தான் மதத்தை உண்டு பண்ணுகிறானே தவிர, மதம் மனிதனை உண்டு பண்ணவில்லை. மதம் என்பது ஒடுக்கப்பட்ட ஒரு பிராணியின் புலம்பல்; மனமில்லாத—எவரும் இதுவரை கண்டிராத-காண முடியாத ஓர் உலகத்தின் உணர்ச்சி. உயிர் இல்லாத நிலைமைகளின் உயிர். மக்களுக்குப் போதையளித்து உருளச் செய்யும் அபினி" என்கிறார் காரல் மார்க்ஸ்.

வாழ்க்கையை வறுமைக்குப் பலியிட்டு, பஞ்சத்திலும் பசியிலும் உழலும் எண்ணற்ற கோடி மக்களின இதய ஏக்கத்தை மதம் என்றாவது தீர்த்துவைத்ததா? தீர்த்துவைக்க முடியுமா? வறுமையில் வாடுபவர்களுக்கு "உலகத்திலே பற்று வைக்காதீர்கள்; யாக்கை நிலைக்காது; தேகம் காற்றடைந்த பை; சோற்றுத் துருத்தி; உற்றார் உறவினர் உடன் வாரார்; பிரபஞ்சம் மாயம்; உலகம் நாடக மேடை; போகங்கள்—பொருள்கள் நிலைக்கா இந்தப் பாழுலகம் பொய். பரத்திலே சுகமுண்டு. அதை நாடிப் பொறுமையாக இகலோகத் துன்பங்களைச் சகியுங்கள்" என்று மதம் போதிப்பதைவிட வேறு என்ன உருப்படியான நலனைச் செய்திருக்கிறது?

சாதிப்பிரிவுகள், குலம் கோத்திரப் பிரிவுகள், சமயப் பிரிவுகள், நியமனப் பிரிவுகள், நீதிப் பிரிவுகள், மூடப் பழக்க வழக்கங்கள், பிடிவாத வெறிகள் முதலி

யவற்றின் தாய் எது? மதமே அல்லவா?

மதத்தின் காரணமாக ஐரோப்பாவிலே 15-வது நூற்றாண்டு முதல் இன்றளவும் நடந்தபோர்கள் எத்தனை? ரோமன் கத்தோலிக்கர்களும் புராட்டஸ்டெண்டுகளுமிட்ட போர்கள்—கொலைகள், பஞ்சம் பசி—மாண்ட மக்கள்—எரிக்கப்பட்ட மக்கள்—கணக்கெடுக்க முடியுமா?

எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேற்றி மனங் குளிர்ந்தது மத வெறியினால் அல்லவா?

சிந்தனைச் சிற்பி சாக்ரட்டீஸை விஷமூட்டிக் கொன்றது மத வெறிதானே!

பொஹீமியா நாட்டுச் சீர்திருத்தவாதி ஜான்ஹஸ், விஞ்ஞானி கலீலியோ, ஜார்ரோனா புருனோ, பாதிரிகளின் பித்தலாட்டத்தை அம்பலமாக்கிய விக்ளிப், பரிணாமவாதி டார்வின், மார்க்ஸ், ஜான் ஆப் ஆர்க் போன்ற எண்ணற்ற அறிஞர்கள் வீரர்கள்—கொல்லப்பட்டும், சிறையிடப்பட்டும், பரிகசிக்கப்பட்டும போனது மதவெறியின் காரணமாக அல்லவா?

வீரான பரஞ்சோதியை, தான் பெற்ற பிள்ளையை அறுத்துக் கறிசமைத்துப் பண்டாரத்திற்கு விருந்திட்டு, சிறுதொண்டனாக ஆகும் அளவுக்கு அடிமுட்டாளாக்கி விட்டது மத போதை அல்லவா?

மனைவியைப் பண்டாரங்களுக்குத் தானமளித்துவிடும் அளவுக்கு மனிதத் தன்மையற்றுப் போகுமாறு ஆக்கி வைத்தது மதவெறியல்லவா?

பார்ப்பனர்களுக்கும் பௌத்தர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும், இந்துக்களுக்கும், சைவத்திற்கும் வைணவத்திற்கும், தென்கலைக்கும் வடகலைக்கும் நடந்த சண்டைகள் எத்தனை? கிறிஸ்தவர்களுக்குள் உள்ள எத்தனையோ பிரிவுகளுள், ஒன்றையொன்று மோதியதனால் மாண்டவர்கள் எவ்வளவு பேர்?

முஸ்லிம்களுள் ஷீஆக்களுக்கும், சுன்னிகளுக்கும், காதியானிகளுக்கும், சுனைத்வல்ஜமாஅத்தார்களுக்கும் நடந்த போராட்டங்கள் எத்தனை?

நம் காலத்தில் நவகாளி—திப்பேரா—பீஹார்— அஸ்ஸாம், கல்கத்தா—பஞ்சாப், வடமேற்கு எல்லை, பம்பாய், சென்னை, ஹைதராபாத்—மைசூர் முதலிய இடங்களில் நடைபெற்ற கொலைகள், கொள்ளைகள், மாதரைக் கற்பழித்தல், கடத்திச் செல்லுதல், பச்சிளங் குழந்தைகளின் நெஞ்சில் கத்தி பாய்ச்சல், பெண்களை மானபங்கப் படுத்தி அடிமைகளைப்போல் விற்பனை செய்தல்—இவைகளெல்லாம் மதத்தின் பேரால் நடைபெற்ற கோரச் சம்பவங்களல்லவா? இத்தகைய கொடுமைகள் அனைத்தும் மதவெறியின் காரணமாக நடைபெற்றன அல்லவா? மதம்—மதம் பிடித்துக் கொலை செய்பத் தூண்டியது; மனிதத் தன்மையைப் போக்கி மக்களைக் காட்டுமிராண்டிகளாக்கியது.

இப்படிப்பட்ட மதப் பேயின் வாயில் அகப்படாமல் மக்களைத் தப்புவிக்க வழியில்லையா? நெஞ்சுரம் வாய்ந்த மக்கள் ஆட்சியில் அமரவேண்டும். அமர்ந்தால் மதப்பேயை அடக்கி ஒடுக்கி அவசியப் பட்டால் வீட்டின் மூலை முடுக்குகளில் உட்கார வைத்துவிடலாம். இன்றைய ஆட்சியாளர்கள் சிந்திப்பார்களா?

தம் சுயசரிதையில் மதப்பிசாசின் கொடுமையைக் கண்டித்தெழுதத் துணிந்த பண்டித ஜவஹர்லால் இன்று செயலில் அதைக் காட்ட முன் வருவாரா! அல்லது வாய்ச்சொல் வீரராக இருந்து விடுவாரா?

புதிய நூல்!

செங்கிஸ்கான்

(மா. தங்கவேலர்)

* விடிவெள்ளியாகச் சஞ்சரித்த செங்கிஸ்கானுடைய வாழ்க்கையை அடிப்படையாக வைத்துத் தீட்டிய அரிய நூல்!
* சரிதம் தழுவிய நல்லதொரு ஏடு!

விலை 1—0—0

வியாபாரிகட்கு தக்கஸாபமுடன் தங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கிறோம்.

விவரங்கட்கு :—

திராவிடன் பதிப்பகம்

P. B. No. 18, வேலூர். N. A.



பதினாறாம் பகுதி
தீங்குயில்

பொழுது விடிந்தது. பரிவின்பனும் உதயனும் அயர்ந்துறங்கிக் கொண்டிருந்தனர். கோமளவர்மன் அவர்களை யெழுப்பி உணவருந்தச் செய்தான். சிறிது நேரங் கழிந்ததும் பரிவின்பன், "நாங்கள் விடைபெற்றுக் கொள்ளலாமா நண்பரே?" என்று கேட்டான். கோமளவர்மன் இளநகை புரிந்தான். 'நண்பர்களே! சென்று வாருங்கள். நாளை இரவு அந்த வைபவத்தின்போது நான் உங்களைச் சந்திக்கிறேன்," என்றான். இருவரின் குதிரைகளும் கொண்டு வந்து நிறுத்தப்பட்டன. இருவரும் கோமளனிடமும் காளிங்கனிடமும் விடைபெற்றுக் கொண்டு குதிரைகள் மீதேறிப் பறந்துசெல்லலானார்கள்.

பாலைநாடு செங்கதிரோனின் இனிய ஒளியைப் பாய்ச்சி அவர்களை வரவேற்றது. அந்நாட்டின் எல்லைக் கோட்டிலே ஒரு பெரிய தோப்பு! அதிலே ஓடிய கொடிவழி ஒன்றிலே நெய்தல் வீரர்கள் சென்று கொண்டிருந்தனர். அந்தக் காலை நேரத்திலே அந்தத்தோப்பிலே இன்பத் தென்றல் வீசி மா இலைகளைக் கீதம் பாட வைத்துக் கொண்டிருந்தது. வானத்துப் புட்கள் தங்களின் காலைக்கீதத்தைப் பலப்பல இனிய தொனிகளிலே அள்ளி அள்ளித் தந்துகொண்டிருந்தன. மரங்களின் 'கீதம்', பறவைகளின் 'இசை' ஆகியவைகளோடு பாவையொருத்தியின் 'அடைத்தேனைத் தமிழ்ப்பாட்டிலே பிழிந்து' தரும் இனிய குரலுஞ் சேர்ந்துவிட்டால்!......கேட்க வேண்டுமா? செவிகளிலே கருப்பக்காடு அமைந்து நிற்குமல்லவா? அன்று பரிவின்பனையும் உதயனையும் இசையின் இனிமையாழத்தை அளந்து பார்க்கச் செய்துவிட்டது ஒரு சேயிழையின் தேன்குரல்!

"புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிப்
பொன்னார் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி இல்லறம் நாடும்
காதல் மாதர் மகிழுறும் நாடு—
வாழ்க வாழ்கவே!"

தென்றலிலே தவழ்ந்து வந்த இந்த அடிகள் அவர்களின் இதயத்தை வருடின! குளத்திலே நீராடிவிட்டு கூந்தலைக் கோதிவிட்டுக் கொண்டு மங்கையவள் அவனையறியாமலே அந்த மதுர கீதத்தைப் பாடிக்கொண்டு அந்தத்தோப்பைக் கடந்து கொண்டிருந்தாள். சிற்றிடையாளைப் பின்புறத்திலிருந்து தான் அவர்களால் பார்க்கமுடிந்தது. சிவந்து உருண்டு திரண்ட வாழைக்குருத்து போன்ற கரங்கள்! செம்மேனியாளின் உடலிலே படர்ந்து, காற்றிலே அசைந்து விளையாடும் கருப்புச்சேலை! அதன் மீது தவழும் சுருண்ட கார் கூந்தல்!......அவள் தன் வீடு செல்லும் மற்றொரு கொடி வழியே திரும்பி நடந்திட்டாள்! அவளின் குரல் மழுங்கிக் கொண்டேயிருந்தது. உருவம் மறைந்துவிட்டது! நெய்தல் வீரர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்ன அருமையான இசை விருந்து! அழகியவளின் இந்தக் குரல் என் கண் முன்னே என் ஆருயிர் நண்பன் அன்பரசை நிறுத்துகிறது உதயா! அன்றொரு நாள் இதே பண்ணமைத்து இதே பாடலின் இன்னொரு அடியை அவன் பாடிக்கொண்டிருந்தகாட்சி என் கண்முன் நிற்கிறது."

"ஆமாம். ஐயா, இவ்வளவு இனிய குரலை நான் இதுவரை கேட்டதே கிடையாது! அதோடு பின்புறத்திலிருந்து பார்ப்பதற்கே இவ்வளவு அழகுத் தோற்றமுள்ளவளாயிருக்கும இவளின் முன்புறத் தோற்றம்...ம்.. நாம் அவள் செல்லும் அந்த வழியே சென்றால் என்ன?......நகரத்திற்குள்தானே அதுவும் செல்லவேண்டும்?"

உதயன் தன்னை மறந்து—தன் எசமானரிடம் பேசுகிறோம் என்ற உணர்வில்லாமல், பேசினான். பரிவின்பன் சிரித்தான்.

திடீரென்று 'கிரீச்' என்று உச்சஸ்தாயில் ஒரு பெண் குரல் அந்தத் தோப்பையே ஒரு உலுக்கு உலுக்கியது! அந்தக் குரல்—பய மிகுதியோடு ஆபத்தான நிலையிலிருக்கும் நபரிடமிருந்து கிளம்பும் குரல்—உணர்ச்சி வீரர்களுக்குக் கேட்டுவிட்டால் போதுமல்லவா? 'உடுக்கையிழந்தவன் கைபோல்' அரை நொடியில் இருவரும் சத்தம் வந்த திக்கு நோக்கி குதிரைகளை விரட்டிக் கொண்டு பாய்ந்தனர். 'அய்யோ! அம்மா!' என்ற அந்தக் குரல் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது, தூரத்திலே, குரலெழுப்பிக்கொண்டிருந்த புனிதையைப் பார்த்துவிட்டார்கள் நெய்தல் வீரர்கள். அது அவளேதான்!

புலியிடம் சிக்கிய ஆடு படும் தவிப்பை ஒத்திருந்தது பாவையவள் ஒரு பொல்லாங்கனிடம் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த அந்த நிலை! இருதயமேயில்லாத அந்த வீணன் அழகியவளை ஒரு மலராக மதித்துவிட்டான்! அன்றலர்ந்தமலராக இருந்த அவள் 'கசங்கிய மலராக' ஆகப்போகும் சமயம்! இக்கட்டான நிலை! பாவையின் அவலக்குரல்! மூர்க்கனின் மோகப்பேச்சும், கோபப் பேச்சும்!

"டேய்! நில்!"—பலத்த சத்தமிட்டான் பரிவின்பன். காமுகன் திரும்பிப் பார்த்தான். வனிதை கூச்சலிடுவதை நிறுத்திவிட்டு மூச்சுத்திணற, சத்தம் வந்த திக்கு நோக்கி ஆவலோடு பார்த்தாள், குதிரை வீரர்கள் தன்னை நெருங்குவதைக்கண்ட காமுகன், 'விஜயா!' என்றான். சற்று தூரத்திலே ஒளிந்து நின்றுகொண்டிருந்த அவன் கையாள் ஓடிவந்தான். குதிரை வீரர்களை அலட்சியமாகக் காட்டி

விட்டுத் தன் வாளையுருவினன், விஜயனும் வாளையுருவி மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டான். அழகியினால் அங்கிருந்து நகரவும் முடியவில்லை. அவளின் நெஞ்சுத்துடிப்பு அவள் உடலையே உலுக்கிக் கொண்டிருந்தது, நெய்தல் வீரர்கள் அந்தக் காமுகனை நெருங்கியதும் குதிரையிலிருந்து இறங்கினார்கள்.

"யாரடா நீங்கள்?" என்று இரைந்தான் அந்தக் காமுகன். பரிவின்பனும் உதயனும் அந்தஇரு அயோக்கியர்களையும் முறைத்துப் பார்த்தபடி நின்றார்கள்,

"பேடிப்பயல்கள்! வீரர்களைப் போல விரைந்து வந்தார்கள். இப்பொழுது வீரமெல்லாம் எங்கே பறந்து விட்டதோ!"

ஏளனமாகச் சிரித்தபடி பேசினான் அந்த துஷ்டன்.

"யாரடா பேடிப்பயல்? தனிமையிலே ஒரு பெண்ணிடம் வீரத்தைக் காண்பிக்கும் நீயா, அல்லது போக்கிரிப் பயலைப் புடைக்கவந்துள்ள நாங்களா?" என்று பரிவின்பன் உக்கிரமாகக் கேட்டான்.

"என்னடா சொன்னாய்? போக்கிரிப் பயல்!.. புடைக்கவந்தான்களாம்!...டேய்..."

அதேக்கணம் அந்தத் துன்மார்க்கன் பரிவின்பனின் மீது பாய்ந்தான். உதயன் விஜயன் மீது பாய்ந்தான். இரு ஜோடிகளும் உருண்டு புரண்டு போரிட்டார்கள்.

உதயன் விஜயனை நையப் புடைத்து மூர்ச்சையுறும்படிச் செய்துவிட்டான். அந்தக் காமுகன் பரிவின்பனோடு மும்முரமாகப் போரிட்டுக் கொண்டிருந்தான்.

வெற்றி கண்டு நின்றிருந்த உதயனின் பார்வை, ஒரு புறத்திலே ஒரு மரத்தின் அடிமரத்திலே சாய்ந்து நின்றுகொண்டிருந்த எழிற் பதுமையின் மீது பாய்ந்தது. பாவையின் தோற்றம் அவள் அடைந்துள்ள களைப்பை அவனுக்கு எடுத்துக் காட்டியது. ஓடினான். அருகிலிருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து துடியிடையாளிடம் நீட்டினான். நன்றியையும் மகிழ்ச்சியையும் சாவதானமாகத் தன் பார்வையிலே மிதக்கவிட்டாள் அழகி. அவள் தண்ணீரைப் பருகிய பின், "யார்? ஏன் இந்த அயோக்கியன் உன்னை இம்சிக்க வந்தான்?" என்று கேட்டான் உதயன், "நான் அரண்மனையிலே வேலை பார்ப்பவள், இளவரசியின் தோழி. நீராடிவிட்டு வந்துகொண்டிருந்தேன். நான் முன் பின் கண்டறியாத இந்த மூர்க்கன் என்னிடம் மிருகத்தனமாக நடந்துகொள்ள ஆரம்பித்தான். நல்லவேளை! நீங்கள் வந்து காப்பாற்றினீர்கள்!" என்றாள் அழகி.

"அரண்மனையில் வேலைபார்க்கின்றாயா?......நாங்களும் அரண்மனைக்குத்தான் செல்கின்றோம்!"

"அரண்மனைக்கா? ...... நீங்கள் எந்த நாட்டுக்காரர்கள்?"

"நெய்தல் நாட்டுக்காரர்கள்; உங்கள் இளவரசியின் பிறந்த தின விழாவிற்குத்தான் செல்கிறோம்!"

"ஓஹோ! அப்படியா!..."

"விழா மிகமிகப் பிரமாதமாயிருக்குமாம்!"

"ஆமாம், ஆமாம்."

"சரி. உங்கள் நாட்டு மக்கள் பட்டினியால் மடிந்து சாகும்போது ஏன் இந்தக் கொண்டாட்டமும் கும்மாளமும?",

"அதுவா? பூபதியின் ஆட்சிக்கு முடிவு காலம் வந்து விட்டது என்பதை அறிவிக்கத்தான்!"

"அரண்மனைப் பணிமகளாகிய நீயும் "

"நான் மட்டுமா? இந்த நாட்டிலே உள்ள ஒரு சில உன்மத்தர்களைத் தவிர மற்றவர்களெல்லாரும் இப்பொழுது விழித்துக்கொண்டு என்னைப் போலத்தான் பேசுகின்றார்கள். இந்தக் கொடியோனின் ஆட்சிக்கு முடிவு கட்டுவதிலேதான் மக்கள் நாட்டம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்."

"அதெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். கோமளவர்மன்..."

உதயன் வார்த்தையை முடிக்கவில்லை.

"கோமளவர்மன்!... அவரை எப்படி உமக்குத் தெரியும்?...நீர் யாரைச் சொல்கின்றீர்?"

"நீங்களெல்லாம் 'வெற்றிவீரன்' என்றழைக்கின்றீர்களே அவரைத்தான் சொல்கிறேன்! ஏன் உனக்கிந்த வியப்பு?"

"இல்லை...கேட்டேன்,"

"அவரை உனக்கு நன்றாகத் தெரியும் போலும்!"

"இல்லை என்னுடைய தோழியொருத்திக்கு நன்றாகத்தெரியும்!"

"எப்படி?"

"இதென்ன கேள்வி?......நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாளிரவு என் தோழி பொற்கொடியின் வீட்டிலே களவுபோன பொருட்களை அவர் அன்றிரவே கள்ளனிடமிருந்து பறித்துக்கொண்டு வந்து அவள் வீட்டிலே சேர்ப்பித்தாராம். அதிலிருந்து......"

"ஓஹோ!......அதாவது நீ இப்பொழுது என்னைப் பார்த்ததிலிருந்து......அதைப்போல!......ம்.... அப்படித்தானே?"

மலர்மேனியாள் பதிலேதும் கூறாமல் தலைகுனிந்து நின்றாள்.

"நீங்குயில்......"

"என் பெயர் எப்படி உனக்குத் தெரியும்?"

உதயன் வார்த்தையைக் கூறி முடிப்பதற்கு முன்பாக வெடுக்கென்று கேட்டாள் அழகி.

"ஓஹோ! உன் பெயர் நீங்குயிலா?...நான், 'நீங்குயில் கூட அவ்வளவு அழகான குரலினையுடையதாக இல்லையே!' என்று சொல்ல வந்தேன்!............பொருத்தமான பெயர்!"

"ஏன் குரலா?"

"ஆம். சற்று நேரத்திற்கு முன்பு இனிமைப் பண்ணமைத்துத் தென்றலிலே தவழவிட்டாயே—'கனிமொழி பேசி இல்லறம் நாடும் காதல் மாதர்...' அந்த அடிகள்!... அஹா!..."

"என் பாட்டிற்குப் போட்டியாகத்தான் அந்தப் பறவைகளும் மரங்களும் ஓசை யெழுப்பியபடியே இருந்தனவே! அவைகளினூடே எப்படி என் குரலை நீர் கேட்கமுடிந்தது?"

"அவைகளெல்லாம் தங்கள் தங்கள் மொழியிலே பாடின! நீ நம் இனிய தமிழ மொழியிலே பாடினாய்! இசைத்தமிழமுதை என் செவியும் மனமும் உண்டன!"

"தமிழ்ப் பாட்டின் மீது அவ்வளவு பிரியமா உமக்கு?"

"இதென்ன கேள்வி? தமிழனிடமா இந்தக் கேள்வி?"

"இல்லையில்லை. எங்கள் நாட்டில் இப்பொழுது வடநாட்டு வேற்றுமொழி 'தில்லாலங்கடி' மெட்டுக்களைக் கொண்ட பாடல்களுக்குத்தான் மதிப்பு அதிகம்! அதனால்தான் அப்படிக் கேட்டேன்."

"அப்படியா! நமது இனிய தமிழ்க் கவிஞரொருவர் இதைப் பற்றிச் சொல்வதைக் கூறுகிறேன் கேள்:

(6-ம் பக்கம் பார்க்க)

கேட்கக் கேட்க வெட்கமாகுதே!

'வியாழன்'

உமா தேவியாரைத் தன் மகளாகவும் பரமசிவனைத் தன் மருமகனாகவும் அடைய வேண்டுமெனப் பலகால் தவமியற்றியதன் பலனாகத் தக்கனுக்கு மகளாக உமா தேவியார் பிறந்தார். தக்கன் அவளுக்குத் தாக்ஷாயணி எனப் பெயரிட்டு வளர்த்து, தக்க பருவம் வந்தவுடன், சிவனை அழைத்து வந்து அவருக்குத் தன் மகள் தாக்ஷாயணியைத் திருமணம் செய்து கொடுத்தான்.

இத் திருமணத்திற்குப் பிரமா புரோகிதராக அமர்ந்து திருமணத்தை நடத்தி வைத்தார். தக்கன் பிரமாவின் புதல்வன். தக்கனின் மகள் தாக்ஷாயணி. பிரமாவின் பேர்த்தி. ஆகவே, பேர்த்தியின் திருமணத்துக்குப் பாட்டனான பிரமாவே புரோகிதராக இருந்து திருமணத்தை நடத்தினார்.

திருமணத்தில் தாக்ஷாயணியும் சிவனும் ஓமகுண்டத்தை வலம் வந்து கொண்டிருக்கையில், தாக்ஷாயணியின் சேலை விலக, அவளுடைய இரு தொடைகளும் தெரிவதைக் கண்ட பிரமா காமந் தாங்காமல், காம வெறி தலைக்கேறி, தாக்ஷாயணியின் அங்க அமைப்புக்கள் முழுவதையும் கண்டு மோக லாகிரி கொண்டுவிட்டதுடன் எப்படியாவது அவளுடைய முக்காட்டை விலக்கி முகத்தையும் பார்த்துவிடவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார். அவள் முக்காட்டை விலக்கி முகத்தைப் பார்க்க பிரமா ஒரு தந்திரம் செய்தார்.

சதி—பதிகளை பணையில் உட்கார வைத்து, ஓமகுண்டலத்தில் பச்சைச் சுள்ளிகளைப் போட்டு, செய்யும் விடவே, புகை பெருவாரியாகக் கிளம்பியது. கண் எரிச்சல் தாங்க முடியாமல் சிவன் தன் கண்களை இரு கரங்களாலும் மூடிக் கொண்டான்.

உடனே, பிரமா தன் பேர்த்தியாகிய தாக்ஷாயணியின் முக்காட்டை நீக்கி அவள் முகத்தை ஆவல் தீரப் பார்க்கவே காம வெறி அதிகமாகி, அவனுக்கு வீரயம் வெளிப்பட்டு, நான்கு துளிகளாக நிலத்தில் விழுந்தது.

இதை எவரும் பார்க்காமல் உடனே பிரமா மறைக்க முயன்ற போது, அதைச் சிவன் அறிந்து கோபாவேசம் கொண்டு, பிரமாவைக் கொல்லச் சூலத்தைத் தூக்கியபோது, திருமணத்திற்கு வந்திருந்த விஷ்ணுவும் பிற தேவர்களும் தடுத்துச் சமாதானம் செய்து, பிரமாவைக் காப்பாற்றினார்கள். இப்படி வெளிப்பட்ட வீர்யத்தின் மூலம், வாலகில்லிய இருடிகள் தோன்றினர்.

தேவேந்திரனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, திலோத்தமை என்ற அழகியை பிரமா படைத்து, தேவேந்திரனிடம் அனுப்புவதற்குப் பதிலாக, அவளைத் தானே சேர விரும்பிக் கையைப் பிடித்திழுக்க, அவள் மானுருக் கொண்டு ஓட, அவளைப் பிரமா துரத்த, அவள் கிளியுருக் கொண்டு பறக்க நான்கு திசைகளிலும் அவளைப் பார்க்க வேண்டி நான்கு முகங்களை உண்டாக்கிக் கொண்டு, தன் பார்வையிலிருந்து அவள் தப்பிவிடாதபடி கவனிக்க, அவள் பயந்து திருவண்ணாமலையிலுள்ள அருணாசலீசுரரிடம் வந்து அடைக்கலம் புகுந்தாள்.

ஒரு முறை பிரமா அசுவமேதம் (குதிரை யாகம்) செய்தார். தேவர்களெல்லாம் இதற்கு வந்திருந்தனர். தேவ பத்னிகளைக் கண்ட பிரமனுக்குக் காம வெறி தலைக்கேறி வீர்யம் வெளிப்பட, அவ்வீர்யத்தைப் பிடித்து அக்னியில் இட்டு ஓமம் செய்ய, அதிலிருந்து சப்த ரிஷிகள் பிறந்தனர்.

ஊர்வசி இந்திர சபையில் நடனமாடிக் கொண்டிருக்கையில், அதைப் பார்த்துக் கொண்டிருந்த பிரமன் மோகங் கொண்டான். அதனால் வீர்யம் வெளிப்பட அதை ஒரு குடத்தில் பிரமன் விட்டான். அதிலிருந்து அகஸ்தியன் பிறந்தான்.

பிறகு, பிரமன் காமாந்தகாரனாகி, அலைந்து, தனக்கு வெளிப்பட்ட வீர்யத்தைத் தாமரை மலரில் விட, அதிலிருந்து 'பத்மை' என்ற ஓரழகி பிறந்தாள். அவளைக் கண்ட பிரமா மேலும் காமம் அதிகரிக்கப் பெற்று, அவளைக் கூட முயன்றபோது, அவள் தனைப் படைத்த பிரமா தனக்குத் தந்தை என்று நியாயம் கூறினாள். பிரமா அந்நியாயத்தை ஏற்காமல் அவளைப் பலவந்தப் படுத்தினார். அவள் தன்னைக் கற்பழிக்க வேண்டாமென்று கெஞ்சினாள். ஆனால் பிரமா சற்றும் மனமிரங்காமல் அவளைப் பலவந்தமாகக் கற்பழித்து விட்டார்.

பத்மையை இவ்வாறு பலவந்தமாகக் கற்பழித்து விட்டபடியால், அவள் கருக் கொண்டு விட்டாள். தன் விந்துவில் பிறந்த பத்மையைப் பலாத்காரமாகக் கற்பழித்து அவளைத் தன் நாயகியாக்கி, கருப்பிணியாக்கி

வைத்து விட்ட பிரமனைக் கண்டபிறர் கையாண்டி செய்யத் தொடங்கி விட்டனர். இதைச் சகியாத பிரமன் மீண்டும் பத்மையின் கருக்குழியில் ஆண்குறியைச் செலுத்தி அவள் கருவிலிருந்த விந்துவை ஆண்குறி மூலம் உறிஞ்சி இழுத்து விட்டார். அதனால் அவள் பிள்ளை பெறவில்லை.

இதற்குமேலும் பிரமா சும்மாயில்லை. எந்த பெண்ணை எங்கே கண்டாலும், அவள் எவருடைய மனைவியாகிருந்தாலும் காம வெறிகொண்டுவிடுவது வழக்கமாகையால், ஒரு முறை இதேபோல, காம வெறிகொண்டு வீர்யம் வெளிப்பட, அதை ஒரு புற்றில் விட்டார், அந்தப் புற்றிலிருந்துதான் வால்மீகி ரிஷி பிறந்தார்.

பின்னர் ஒருநாள் பிரமா காம வெறி உச்சநிலையடைந்தவராய் வனத்தில் சுற்றிக்கொண்டு வந்தபோது, ஒரு புதரில் ஒளிந்து கொண்டிருந்த பெண் காடி ஒன்றைக் கட்டியணைத்து சுகித்தார். அதன் பலனாகத்தான் காடி முகமுடைய ஜம்பவந்தன் பிறந்தான்.

இப்படியாக அருணாசல புராணம், பிரம புராணம், திரு ஆமாத்தூர்ப் புராணம், காஞ்சி புராணம் முதலிய இன்னும் பல புராணங்களில் இன்னும் ஏராளமான கதைகள் இருக்கின்றன.

* * *

இவ்வளவும் சர்வ லோகநாயகனாகிய—சர்வ ஜீவராசிகளையும் படைத்த முதல்வனாய—பாத்துவம் வாய்ந்த மும்மூர்த்திகளுள் ஒருவனாகிய பரப் பிரம்மம் எனப்படும் பிரமதேவனைப் பற்றிய வரலாறுகள். இந்தப் பிரமன் பிராமண குலம். கடவுளுக்குமா குலம் என்று கருதுகிறீர்களா? இவர் பிராமண குலம் என்றுதான் வேதங்கள் கூறுகின்றன.

இப்படிப்பட்ட கடவுள் செய்யத் தகாத—ஒழுக்கக் கேடான—சட்டதிற்கோ நெறிமுறைக்கோ சற்றும் கட்டுப்படாத—மனிதர்கள் மனத்தாலும் நினைக்க வொண்ணாத—மிகக் கேவலமான இழி செயல்களைச் செய்திருப்பதாக, சமஸ்கிருத ஞானிகள், மதவாதிகள், கடவுள்பக்தியுடையவர்கள், தர்ம சாஸ்திரம் பயின்ற புலிகள் என்போரே எழுதிவைத்திருக்கின்றனர். இந்தக் கதைகளைச் சுயமரியாதைக் காரர்களோ, நாஸ்திகர்களோ எழுதி வைத்துவிடவில்லை.

ஆரியர்கள் எழுதிவைத்த புராணங்கள்படி தாக்ஷயணி என்பவள் பிரமனுக்குப் பேர்த்தி. திருமணத்தின் போது, அவள் தொடை தெரிந்ததென்னும் காரணத்தினால் எந்தப் பாட்டனாவது வீரியம் வெளிப்படும் அளவுக்குக் காமவெறி கொள்வதுண்டா? கொள்ள முடியுமா? கொள்ள மனந்தான் இடந்தருமா? அப்படி தந்ததென்றால் அத்தகைய மனமுடைய ஒருவரை எந்த ரகத்தில் சேர்ப்பது! மனித இனத்தில் பாட்டன் தன் பேர்த்தி மீது காமங் கொண்டதாக எவராவது மெய்ப்பிக்க முடியுமா? அப்படிக் கொண்டால், மனித இனத்தில் அந்தப் பாட்டன் கதி என்னவாயிருக்கும்? ஆனால் கடவுள் இனத்தில் இது நடந்திருக்கிறது. இச்செயல் லீலையாகவும் இதைப் புரிந்தவர் கடவுளாகவும் இன்றளவும் கருதப்பட்டு வருகிறார்.

பெண்களைக் கண்டவுடன் வீரியம் வெளிப்படுவதும் அதைப் பிடித்துக் கும்பத்தில் விடுவதும், புற்றில் விடுவதும், பூவில் விடுவதும் அவற்றிலிருந்து அகஸ்தியர், வால்மீகர், பதுமை பிறப்பதுமென்றால், இது சற்றேனும் அறிவுக்குப் பொருந்துகிறதா? பிறவிக்கு விந்துவும்-நாதமும் சேர வேண்டும். நாதமின்றி விந்துவும். விந்துவின்றி நாதமும்—பிள்ளை உருவடைய முடியாது என்பது உலகறிந்த உண்மை. ஆனால் பிரம விந்துவுக்கு-நாதமின்றிப் பூவிலும் புற்றிலும் பிள்ளை பிறக்கிறது. மானசீகமாகவே படைப்புத் தொழிலை நடத்தி லட்சோப லட்சம் மக்களை உற்பத்தி செய்யக் கூடிய வல்லமை படைத்த பிரமா இவ்வாறு பெண்ணுருவைக் கண்டவுடன் காமவெறி கொள்வதும் அப்பெண்களைக் கற்பழிப்பதும், அவர்கள் கிடைக்கா விட்டால் சபலபுத்தன்மை - புலனடக்கம் எதுவுமின்றி வீர்யத்தை வெளியில்விட்டு, அதைத் தூக்கிக்கொண்டு கும்பத்தையும் புற்றையும் தேடிக்கொண்டோடுவதுமாயிருப்பானேன்?

பெற்ற மகளைப் பெண்டாளுவதில் பிரமன் கை தேர்ந்தவர். சரஸ்வதியைப் படைத்தார்—மனைவியாக்கிக் கொண்டு 100 தேவவருடம் அவளைச் சுகித்து, பின் மகனுக்கு மனைவியாக்கி வைத்ததன் மூலம் மகளை மனைவியாகவும் மருமகளாகவும் ஆக்கிவிட்டார். திலோத்தமையைப் படைத்து, அவளைக் கற்பழிக்க மானேயோடி, கிளியாய்ப் பறந்து, நான்கு திசைகளிலும் அவளைப் பார்க்க நான்முகமாகி விட்டார்.

தன் விந்துவில் பிறந்த பதுமையைக் கற்பழித்து அவளைக் கசக்கிய மலராக்கி, கருப்பெறச் செய்து அக்கருவிலிருந்த தன் விந்தையும் உறிஞ்சியெடுத்து அவளுக்குப் பிள்ளை பிறக்காதபடி செய்தார். இதில் ஒரு வேடிக்கை. ஓர் ஆணின் விந்து, பெண்ணின் நாதத்துடன் கலந்தால்தான் கருக் கொள்ளும். அப்படிக் கலந்து உருவாகிவிட்டது முதல் அது மாமிசப் பிண்டமாக ஆகி வளரத்தொடங்கு

(7-ம் பக்கம் பார்க்க)

புத்தம் புதிய நூல்கள்

சூழல் விளக்கு—மு. கருணாநிதியின் கருத்துக்கோவை பல்சுவைத் தொகுப்பு—இன்பத்தின் ஊற்று—படிக்கப் படிக்க சுவை தரும் எழுத்தோவியங்கள் அழகிய மூவர்ண அட்டை.
விலை ரூ. 1—0—0

வாளர்பாடி—தனலன் நீட்டியது கருத்தை அள்ளும் கற்பனை—ஏழைகளின் வாழ்வில் ஏற்படும் கொந்தளிப்புகளைக் கொண்டு சித்தரிக்கப்பட்ட சிறந்த கருத்தோவியம். அழகான மூன்றுநிற முகப்புடன் 136 பக்கம் விலை ரூ. 1—8—0

சூழ்ச்சி—மு. அருணாசலம் எழுதிய அரிய நாடகம் அழகான மூவர்ண அட்டை—நல்ல சரளமான நடை—அரசகுரு மயானந்தரின் வஞ்சகம் அழிந்த வரலாற்றை விளக்குவது. 92 பக்கங்கள்
விலை ரூ. 1—0—0

செங்கிஸ்கான்—கா. தங்கவேலர் தந்த பல கருத்துக் குவியல்கள் செங்கிஸ்கான், எகிப்து, பாதவிக்கும் பாரசீகம், தான்எந்து தியத்; பேரு வீரர் ஆகிய ஆறு பகுதிகளில் அறுசுவை உணவை அளிக்கிறார் தங்கவேலர். கண் கவரும் பல நிற அட்டை
விலை 1—0—0

செவ்வானம்—கோரநாதன் உதவிய செந்தேன் தவழும் பூங்கொடியாக—தீய்ந்த கருகும் மொட்டாக குள்ள மனத்தினரால் மாற இருந்த புனிதை குமுதத்தைக் காத்து, அவள் வாழ்விலே செவ்வானச் சிரிப்பு தோன்றுமாறு செய்தான் தாமோதரன். இதனைச் சுவைபட விளக்கும் அரிய நூல் இது. அழகான முகப்பு. 148 பக்கம் விலை ரூ. 1—8—0

விதவையின் காதல்—சுட. நாராயணன் தந்த நவினம். செந்தமிழ் நடை—படிக்கப் படிக்க சுவைப்பது—கருத்துச் செறிவு நிறைந்தது—அழகான மூவர்ண அட்டை விலை ரூ. 1—0—0

இதயக் குமுறல்—கோவை. எஸ். சதாசிவம் அளித்த கருத்தோவியம் உலக வாழ்வில் அலைபோல், அலையாக வந்துமோதும் கொடுமைகளை எதிர்த்துப் போராடி தன் லட்சிய வாழ்க்கையை நடத்திய காதலர்களைப் பற்றிய அரிய நவினம். தெவிட்டாதத் தேன்சுவை—ஒப்பற்ற உயர் கருத்துக் குவியல்—செந்தமிழ் ஊற்று இந் நூல். அழகான மூவர்ண அட்டை
விலை ரூ. 1—8—0

பகுத்தறிவுப் பாசறை

131, பிராட்வே, சென்னை.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் உதடுகளின் ஓரத்திலே தவழ்ந்த புன்னகை அவளுக்கு எதையோ கூறிற்று. அவளின் இதழ்க் கடையிலே ஏதோ பதில் வருவதை அவன் கண்டான்!

பரிசின்பன் அந்தக் காமுகனை கையப் புடைத்துவிட்டான். அவன் பின்வாங்கி ஓட்டம்பிடிக்க ஆரம்பித்தான். அப்பொழுதுதான் சுயவுணர்வு பெற்ற விஜயனும், தன் எசமானன் ஓடுவதைக் கண்டதும் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தான்.

பரிசின்பன் உதயன் பக்கமாக வந்தான்.

"ஐயா! உங்கள் இருவருக்கும் மிக்க நன்றி. நான் வருகிறேன். வணக்கம்!"

திங்குபில் விடைபெற்றுக்கொண்டாள்.

"இவள்......" பரிசின்பன் கேட்டான்.

"யாரென்பதையெல்லாம் கேட்டறிந்து கொண்டேன். வாரும். போகும் வழியில் அவையாவையும் உமக்குச் சொல்லுகிறேன்!" என்றான் உதயன் சிரித்துக்கொண்டே. பரிசின்பனும் சிரித்துக் கொண்டான். அந்தச் சிரிப்பிலே பல அர்த்தங்களிருப்பதை உதயன் கண்டான். அது அவனை என்னென்னவெல்லாமோ செய்திட்டது!......

இருவரும் குதிரைகளை விரட்டினார்கள். சென்று கொண்டே விளக்கினர். (தொடரும்)

தேன்துளிகள்!
மு. கருணாநிதியின்
சூழல் விளக்கு 1.0.0
கருணாநிதியின் வர்ணனைகள் 0.10.0
உணர்ச்சிமாலை 0.8.0
எஸ். பி. [illegible]தன் எழுதிய
வேதனைத்தால் 0.4.0
சுப்பு ஆறுமுகம் எழுதிய
144 (கவிதை) 0.8.0
விரைவில்!
இராம. அரங்கண்ணலின்
உடைந்த ஆசை
[illegible] V.P. [illegible]
கருணாநிதி பதிப்பகம்,
சென்னை. 2.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers. 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)